# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 15.

முனிசிபாலிட்டியார் இந்தியரிருந்த இடங்களை சொந்தமாக்கிக் கொண்டவுடனேயே இந்தியர்களை அப்புறப் படுத்தி விடவில்லை. அவர்களை வெளியே அனுப்புவதற்கு முன் அவர்களுக்குத் தகுந்தசோர் இடத்தையாரும் அமர்த்தவேண்டியிருந்தது. இவ்விஷயத்தை முனிசிபாலிட்டியார் சுலபமாகச் செய்ய முடியவில்லை யாகையால் இந்தியர்கள் அந்த அசிங்கமான இடத்திலேயே வசிக்க நேர்ந்தது. இதனால் இந்தியர்களின் நிலை முன்பிருந்ததைவிட அதிகமாய் மோசமாகிவிட்டது. குடியிருப்புநிலங்களுக்குச் சொந்தக்காரர்களாயிருந்தது போய், பிறரை எதிர்பார்த்து அவர்களுடைய தயவில் குடியிருக்க வேண்டியவர்களாகிவிட்டனர். ஆதையால் அவர்களிருந்தவிடம் முன்பிருந்ததைவிட அதிக அசுத்தமானதாகிவிட்டது. அவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாயிருக்கும் பொழுது சட்டத்திற்கு பயந்தாவது கொஞ்சம் சுத்தமாயிருக்க வேண்டியிருந்தது. அத்தகைய பயம் முனிசிபாலிட்டிக்கு இல்லை! இந்தியர்களிருந்த விடத்தில் குடியிருப்போர் தொகை அதிகரித்தது. அதோடு ஒழுங்கின்மையும் அசுத்தமும் அதிகரித்துக் கொண்டேயிருந்தன.

இந்தியர்கள் சர்க்கார்சம்பந்தப் பட்ட விஷயங்களில் அதிக சிரமப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று பிளேக் நோய் பரவிற்று. இது சாதாரணமான பிளேக்கன்று அதைவிடக் கொடுமையான பிளேக் நோய் வேறொன்றுமேயில்லை. அதிர்ஷ்ட வசமாக அந்நோய் இந்தியர் வசித்த விடத்தில் முதலில் உண்டாகவில்லை. ஜோகான்ஸ்பர்க்கிற்கு அருகிலுள்ள தங்கச் சுரங்கங்களில் தான் அது முதலில் ஆரம்பமாயிற்று. அவற்றில் வேலை செய்து வந்த தொழிலாளர் நீக்ரோ வகுப்பைச் சேர்ந்தவர்கள். எனினும் அவர்களுடைய சுகாதாரத்திற்கு அவர்களை வேலைக்கு வைத்திருந்த முதலாளிகளே அதிகமாகக் கடமைப்பட்டவர்கள். அச்சுரங்கங்களில் சில இந்தியர்களும் வேலைசெய்து வந்தனர். அவர்களில் 23 பேருக்கு அந்நோய் பற்றிற்று. நோய் கடுமையாயில்லாமையால் மாலையில் வழக்கப்படி இந்தியர்களிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தனர். ஸ்ரீ. மதன்ஜத் "இந்தியன் ஒப்பினியன்" பத்திரிகைக்குச் சந்தாவும், சந்தாதாரையும் சேர்ப்பதற்காக சுற்றுப்பிரயாணஞ் செய்து வந்தார். அச்சமயத்தில் அகஸ்மாத்தாக அவர் இந்தியர்கள் தங்கியிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் சிறந்ததைரிய புருஷர். அங்கு துன்பத்திற்கு ஆளாயிருக்கும் இந்தியர்களைக் கண்டதும் அவருடைய மனம் கொதித்தது. அவர் அடியிற்கண்ட விஷயத்தைக் குறிப்பிட்டு எனக்கு ஒரு குறிப்பை அனுப்பினார்:—

"திடீரென்று இங்கு பிளேக் நோய் பரவி விட்டது. நீங்கள் உடனே இங்கு வந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இல்லாவிடில் பெருந்தீமைகள் விளையும். தயவு செய்து உடனே வரவும்."

## நோயுள்ளவருக்கு சிகிச்சை.

ஸ்ரீ. மதன்ஜத் பூட்டியிருந்த ஒரு வீட்டை ஆண்மையோடு உடைத்து அதில் நோய் பற்றியவர்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தார். நான் உடனே அவ்விடத்திற்கு ஸைகிளில் சென்றேன். அவ்வீட்டை எங்களுடைய புழக்கத்தில் திடீரென்றும் அனுமதியின்றியும் வைத்துக்கொள்ள நேர்ந்ததைக் குறித்து நகர குமாஸ்தாவிற்குத் தெரிவித்தேன்.

டாக்டர் வில்லியம் காட்பிரே அச்சமயம் ஜோகான்ஸ்பர்க்கில் தமது தொழிலை நடத்திவந்தார். இவ்வியாதியைப்பற்றிய செய்தி கிடைத்ததும் அங்கு [illegible] வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். நோயுற்றவர்களுக்கு, வைத்தியராகவும், அன்புள்ள தாதியாகவும் அவர் சேவை புரிந்தார். நோயாளிகள் 23 பேர் இருந்தபடியால் நாங்கள் மூவருமே கவனித்துக்கொள்ள முடியவில்லை. ஒருவனுடைய மனது மாத்திரம் பரிசுத்தமாயிருக்குமாகில் அவனுக்கு சொல்ல நெருக்கடியுண்டானால் அதை எதிர்க்கப் பலர் முனைந்து முன் வருவார்களென்பதில் சந்தேகமேயில்லை. இது என்னுடைய அனுபவத்தில் கண்ட உண்மை. என்னுடைய காரியாலயத்தில் அச்சமயம் நான்கு இந்தியர்களிருந்தார்கள். அவர்களில் இருவருக்கு ஸ்ரீ. கல்யாணதாஸ், மாணிக்கலால் என்று பெயர். மற்றிருவருடைய பெயர் எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. ஸ்ரீ. கல்யாணதாஸை அவருடைய தந்தை என்னிடம் ஒப்பித்திருந்தார். கீழ்ப்படிந்து வேண்டிய வேலைகளை அன்போடு செய்வதில் ஸ்ரீ. கல்யாணதாஸ் கொண்டிருந்த ஆர்வத்தைப்போல ஆப்பிரிக்காவிற்குள் வேறு யாரிடமும் இருந்ததாக நான் கண்டதில்லை. அதிர்ஷ்டமாக அவர் அப்பொழுது பிரமசாரியாயிருந்தார். ஆகையால் பல ஆபத்தான வேலைகளை அவருக்குக் கொடுக்கவும் எனக்கு சௌகரிய மேற்பட்டது. மாணிக்கலால் ஜோகான்ஸ்பர்க்கில் அகப்பட்டுக் கொண்டார். அவரும் அச்சமயம் பிரமசாரியாக இருந்ததாகவே எனக்கு ஞாபகம். என்னுடைய குமஸ்தாக்களும், அருமைக் குமாரர்களுமாகிய அந்நால்வரையும் தியாகஞ் செய்து விடுவதென முடிவுசெய்து கொண்டேன். இதைப்பற்றி கல்யாணதாஸை யோசிக்கவேண்டிய அவசியமேயில்லை. மற்றவர்களும் கேட்ட உடனே சம்மதித்தார்கள். "நீங்கள் எங்கிருக்கிறீர்களோ அங்கே நாங்களுமிருப்போம்" என்று சிறிய அருமையான பதிலைத் தந்தார்கள்.

ஸ்ரீ. ரிட்ச்சின் குடும்பம் பெரிது. அவர் பிரதிக்ஞை செய்யத் தயாராக இருந்தார். ஆனால் நான் தடுத்துவிட்டேன். அவரை கஷ்டத்திற்குள்ளாக்க எனக்கு விருப்பமில்லை. ஆகையால் வியாதி பரவியிருந்த இடத்திற்கு வெளியில் அவரை யிருக்கும்படி செய்தேன். அவர் அங்கிருந்துகொண்டே தன்னாலியன்றதைச் செய்துவந்தார்.

வியாதியுற்றவர்களுக்கு இரவில் சிகிச்சை செய்வதுதான் அதிகக் கஷ்டமாயிருந்தது. அத்தகைய இரவுகளை பயங்கர இரவுகளென்றே கூற வேண்டும். நான் இதற்கு முன் பல வியாதியஸ்தர்களுக்கு சிஸ்ருஷை செய்திருக்கிறேன். ஆனால் பிளேக் நோயால் வருந்தியவர்களைச் சிகிச்சை செய்ததில்லை. டாக்டர் காட்பிரேயின் முயற்சியால் நாங்கள் அதிகமாக ஒன்றும் செய்யவேண்டியிருக்கவில்லை. அவர்களுக்கு வேளா வேளைக்கு மருந்து கொடுத்தல், கேட்பவைகளை எடுத்துக் கொடுத்தல், அவரவர்களுடைய படுக்கை முதலியவைகளை சுத்தமாக வைத்திருத்தல் முதலியவைகளையே முக்கியமாக கவனிக்க வேண்டியிருந்தது. மேலும் அவர்களுக்கு அடிக்கடி ஆறுதல் கூறிவந்தோம். இவைகளே நாங்கள் செய்து கொண்டிருந்தவைகள். வாலிபர்கள் உற்சாகத்தோடு செய்துவந்த சேவை என்னை அதிகச் சந்தோஷப்படும்படி செய்தது. டாக்டர் காட்பிரே முதலியவர்கள் கொண்டிருந்த தைரியத்தை சிலர் அறிந்து கொள்ளலாம். ஆனால் வாலிபர்களிடமிருந்த சக்தியை என்றும் பிறர் காணமுடியாது. எனக்கு ஞாபகமிருக்கிறவரையில் இரவு முழுதும் நாங்கள் விழித்திருந்து வேண்டியவைகளைச் செய்ததாகவே எனக்கு ஞாபகமிருக்கிறது. இந்த சம்பவம் மிகக் கஷ்டமானதாயிருந்தபோதிலும் என் விஷயத்தில் பல முக்கிய மதக் கொள்கையை போதிப்பதாயிருந்தது. அதைக் குறித்து அடுத்த இரு அத்தியாயங்களில் எழுதுகிறேன்.

# இந்தியாவும் ஜப்பானும்.

(பி. ஏ- ம. இருதய நாடார் மொழிபெயர்த்தது.)

ஸ்ரீமான் ஜே. டி. சந்தர்லண்ட் "மாடர்ன் ரிவியூ" பத்திரிகையில் எழுதுவதன் சாராம்சம்:—

சிறிய தேசமாகிய ஜப்பான் ஆசியாவிலும் உலகமுழுவதிலும் பெருமைபெற்று விளங்கும்போது விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் மிகப் பெரிதானதும் நாகரீகத்திற் சிறந்ததெனப்பெயர் பெற்றதுமான இந்தியா மதிப்பின்றி சீரழிந்து இருக்கு மிடந்தெரியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஜப்பானியர் உயர்ந்தவர்களா? இந்தியர் தாழ்ந்தவர்களா? ஜப்பான் ஒவ்வொரு துறையிலும் மறுமலர்ச்சியடைந்து முன்னேற்றமடைந்திருக்கும் போது இந்தியா பின்னடைந்திருப்பதற்குக் காரணம் என்ன? இதற்குக் காரணம் ஜப்பான் சுதந்திர தேசம். இந்தியாவோ சுமார் 200 வருஷகாலமாய் அயல் நாட்டினாக்கு அடங்கி அடிமையாக இருந்து வருகிறது. ஜப்பானிய சர்க்கார் ஜப்பானியர்களுக்கு என்னென்ன செய்திருக்கிறார்களென்பதையும் இந்திய சர்க்கார் ஜப்பானியர்களுக்கு என்னென்ன செய்திருக்கிறார்களென்பதையும் இந்திய சர்க்கார் இந்தியர்களுக்கு என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

1. ஜப்பானில் படிக்காதவர்களே இருக்கலாகாதென்று ஜப்பானிய சர்க்கார் எல்லோருக்கும் கல்வி கற்பிக்க ஆரம்பித்தனர். அதன் பலனால் ஜப்பான் இப்போது உலகத்திலேயே அறிவுபடைத்த தேசமாக விளங்குகிறது.

இந்தியாவிலோ கல்வி வேண்டுமென்று ஜனங்கள் எவ்வளவு மன்றாடியும் இந்திய சர்க்கார் பிடிவாதமாக மறுத்துவிட்டதால் சுமார் 160 வருஷங்களுக்குப் பிறகும் இந்தியாவில் 100-க்கு 90 பேருக்கு மேல் கல்வி யறிவில்லாதவர்களாயிருக்கின்றனர்.

2. ஜப்பான் சர்க்கார் ஆரம்பத்திலிருந்தே பலவகைப்பட்ட கைத்தொழில்களையும் ஆதரித்து வளர்க்க ஆரம்பித்ததால் இப்போது ஆசியாவிலேயே முதன்மையாக விளங்குகின்றது.

இந்தியாவிலோ இங்கிலாந்தின் நன்மைக்காக இந்திய சர்க்கார் வேண்டுமென்றே எல்லா சுதேச கைத்தொழில்களையும் அழித்து பெரிய கைத்தொழில் தேசமாக விளங்கிய இந்தியாவை கிரேட்பிரிட்டன் கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை உற்பத்தி செய்யுந்தேசமாகச் செய்துவிட்டது.

3. சுய ஆட்சிபுரியும் ஜப்பானிய சர்க்கார் அயல் நாட்டு வர்த்தகத்தையும் கப்பல் கட்டுந்தொழிலையும் ஆரம்பத்திலிருந்தே வளர்த்ததால் ஜப்பான் இப்போது ஆசியாவிலேயே முதன்மையான வியாபார தேசமாய் விளங்குவதோடு உலகத்திலேயே முதன்மை பெற்ற தேசங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

இந்தியாவிலோ பிரிட்டிஷ் சர்க்கார் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும் பிரிட்டிஷ் கப்பல் கட்டும் கம்பெனிகளுக்கும் பரிவு காட்டி ஆதரவளித்து ஒரு காலத்தில் வியாபாரப்பெருக்கிலும் கப்பல் கட்டுந்தொழிலிலுஞ் சிறந்து விளங்கிய இந்தியாவின் தொழிலை கெடுத்துவிட்டதால், இப்போது இந்தியாவின் அயல் நாட்டு வியாபாரம் பிரிட்டிஷாரிடமிருக்கின்றது. அது பிரிட்டனைச் செழிக்கச் செய்கின்றது. இவ்வியாபாரத்திற்கு வேண்டிய கப்பல்கள் கிரேட் பிரிட்டனின் கட்டப்படுகின்றன. இந்தியாவின் கைத்தொழிலுரிமை பறிக்கப்பட்டு அதை அடக்கி ஆளும் தேசத்திடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

4. ஜப்பான் சர்க்கார் மேற்சொன்ன வழிகளிலும் மற்றும் பலவழிகளிலும் ஜப்பான் செல்வத்தைச் செழிக்கச் செய்திருக்கின்றனர். ஆனால் இந்திய கவர்ன்மெண்டோ இந்தியாவின் செல்வத்தைப் பெருக்க வல்ல கைத்தொழில்களை அழித்துவிட்டதோடு இந்தியாவின் செல்வத்தை வரியின் மூலமும் அடியிற் கூறப்படும் மார்க்கங்கள் மூலமும் இங்கிலாந்திற்கு ஏராளமாகக் கொண்டுபோய் விட்டது. இந்தியாவில் வாங்கவேண்டிய சாமான்களை இங்கிலாந்தில் வாங்கிற்று. யுத்தச் செலவை எவ்வழியிலும் அனுகூலம் பெறாத இந்தியா கொடுக்கும்படி செய்தது. இந்தியாவிலுள்ள முக்கியமான உயர்தர உத்தியோகங்களுக்கெல்லாம் அதிகச் சம்பளம் கொடுத்து இங்கிலீஷ்காரரை நியமித்தது. அவ்வுத்தியோகங்களுக்கு இங்கிலீஷ்காரர்களைவிடத் திறமையான இந்தியர்களை மூன்றிலொருபங்கு சம்பளத்தில் நியமிக்கலாம். இங்கிலீஷ்காரர்கள் 24 வருஷம் வேலை பார்த்தபின் அவர்களுக்கு ஏராளமான உபகாரச் சம்பளம் அவர்கள் உயிருள்ளவரையில் இங்கிலாந்திற்குக் கொண்டுபோய்க் கொடுத்து வருகிறது. இவ்வாறு பல வழிகளிலும் இந்தியாவின் செல்வம் உறிஞ்சப்படுகிறது.

ஜப்பானுக்கும் இந்தியாவிற்கும் இவ்வளவு வித்தியாசங்களிருப்பதற்குக் காரணம் ஜப்பான் தானே ஆளுகின்றது. இந்தியா அன்னியரால் ஆளப்படுகின்றது. இதைவிட்டுச் சிலர் ஜப்பானியர் எதையும் பிரத்தியட்சமாய்ச் செய்து பார்ப்பவரென்றும், இந்தியர் அவ்வாறில்லை என்றுங்கூறுகின்றனர். இது தவறு. 70 வருஷங்களுக்கு முன் ஜப்பானியர் இப்போதுள்ளது போலில்லை. அப்போது அவர்கள் யாதொரு கைத்தொழிலும் வியாபாரமுமின்றி விவசாயத்தை முக்கிய தொழிலாகக்கொண்டு இயங்கினர். இச்சொற்ப காலத்திற்குள் ஜப்பான் சுதந்திரம், கல்வி, உலகத்துடன், பழக்கம் ஆகியவைகளால் இப்போதுள்ள நிலையை அடைந்திருக்கிறது. இந்தியாவிலோ பண்டைக்காலமுதலே அறிவாளிகள், கவிகள், தத்துவஞானிகள்; குருக்கள், சிஷ்யர், விவசாயிகள், சிற்ப சாஸ்திரிகள், வியாபாரிகள், கைத்தொழில் செய்வோர், போர்வீரர் முதலிய பல தொழிலுடையோர் சிறந்து விளங்கியிருந்தனர். தற்கால ஐரோப்பிய எண்ணத்தாலும் சாஸ்திரத்தாலும் ஆசியாவிலேற்பட்ட விழிப்பு இந்தியாவில் தான் முதன் முதல் தோன்றிற்றென்பதையும் ஜப்பானில் தோன்றவில்லை என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. ஜப்பானைவிட இந்தியாவிற்குத்தான் ஐரோப்பாவுடன் நெருங்கிய சம்பந்தம் இருந்து வருகிறது. ஜப்பான் விழிப்பதற்கு 50 வருஷங்களுக்கு முன்னரே ராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகர முதலியோர் மூலம் இந்தியாவிலும் ஆசியாவிலும் புத்துணர்ச்சி தோன்றிற்று. இந்தியா அன்னியரால் ஆளப்படாமல் சுதந்திர தேசமாயிருந்தால் அவ்வுணர்ச்சி விருத்தியடைந்து நல்ல பலனைக் கொடுத்திருக்கும்.

இப்பொழுது முழு நிலைமையையும் பின் வருமாறு கூறலாம்:—ஜப்பான் அபிவிருத்தியடைந்து கௌரவமடைந்திருப்பதற்கு அது சுதந்திர தேசமாயிருப்பதே. 1852-ல் அமெரிக்காவைச் சேர்ந்த கம்மோடர் பெரி அங்கு சென்று உலக வியாபாரத்தில் சம்பந்தப்படும்படி செய்தபோது ஜப்பானை ஜெயிக்கவில்லை. அடக்கியாளவில்லை. சொத்தைப் பறிக்க ஆரம்பிக்கவில்லை. அதற்கு மாறாக அதன் சுயேச்சையையும் உரிமைகளையும் மதித்து சுதந்திரம் பெற்ற ஜனங்களுடன் பழகச் செய்தார். அவ்வாறு அன்னியரால் ஆளப்படாமல் சுதந்திரமாக இருந்ததால் தான் கிரேட் பிரிட்டன் பிரான்ஸ் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் முதலிய தேசங்களுக்குச் சமமான நிலையிலிருக்கின்றது. பிள்ளைகள் பாடசாலையிலிருக்கின்றனர். ஜனங்கள் வயிறு நிறையச் சாப்பிடுகின்றனர். கைத்தொழில்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. அதன் செல்வமும் அதற்குச்சொந்தமேயல்லாது பிறர்க்குச்சொந்தமல்ல. ஆனால் அமெரிக்காவா

[இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## 11-வது நாடார் மகாநாடு.

### கும்பகோணம்.

#### 5-வது அறிக்கை.

நாடார் மகாஜனங்களே!

இவ்விருபதாவது நூற்றாண்டில் மகாயுத்தத்தின் பலனாய் உலகம் முன்னேற்றமான வழிகளாய கல்வி, நாகரீகம், ஆசார சீர்திருத்தம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளில் சீர்திருத்தம் அடைந்து கொண்டிருப்பதற்கு பல சங்கங்கள் தோன்றியதே காரணமாகுமென்பதை வலியுறுத்துகிறோம். நமது குல நன்மையை நாடி உழைப்பதற்கு நமது நாடார் மகாஜன சங்கம் அவசியமே. சீர்திருத்தம் அடைய வேண்டும் என்ற நோக்கமுடைய எந்த தேசமும் எந்த ஜனசமூகமும் தனது குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பலதரப்பட்ட அபிப்பிராயப்பட்ட கனவான்கள் ஒருங்கே கூடி பல விஷயங்களை ஆராய்ந்து உணர்ந்து கருது யுக்தி அனுபோகங்களுக்கு ஒத்த விஷயமாய் தீர்மானம் செய்யப்பெறும் விஷயங்களை அமுலுக்குக் கொண்டுவருவது அறிஞர்களின் கடமையாகும். அதற்குப் போதிய வழிகாட்டியாய் இருப்பது சங்கங்களும் மகாநாடுகளுமேயாகும். பத்து வருட காலங்களாய் நாம் நமது ஜனசமூக மகாநாடுகளைக் கூட்டி வைத்தோம். பலதரப்பட்ட விஷயங்களை முடிவு செய்து அமுலில் வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது சங்கமோ 17 வருஷ காலங்களாக வளர்ந்து யௌவன திசை அடைந்துவிட்டது. இது ஒரு பெரிய சந்தோஷமான நற்காலம் என்பதற்கு நமது 11-வது மகாநாடு கும்பகோணத்தில் நடைபெறுவதே போதிய சான்றாகும். சென்ற ஈராண்டுகளாக குலாபிமானிகளின் ஸ்காலர்ஷிப் லாட்டரியின் பிரசாரத்தால் அபிமானத்தில் ஈடுபட்டு உழைத்த தென்ஜில்லாக்களில் வாசம் செய்யும் நம்குல கனதனவான்கள் மகாநாட்டைக் குறித்த காலத்தில் நடத்திவைப்பதற்கு சற்றுப் பின் வாங்கிய காரணத்தால் அன்னவர்களில் தூண்டுகோலை ஆதாரமாகவைத்து வடஜில்லாக்களின் பிரதிநிதிகளாகிய கும்பகோணவாசிகளாகிய நாங்கள் 11-வது மகாநாட்டை ஆடம்பரச் செலவின்றி சிக்கனத்துடன் நவீன நாகரீக தேசியவாஞ்சையுடன் மகாநாடு நடைபெறுவதற்கான முறைகளை அனுசரித்து சகல ஏற்பாடுகளையும் குதூகலத்துடன் தயார் செய்து கொண்டிருக்கிறோம். நம் குலத்தவர்கள் பெரும் பான்மையாய் வாசம் செய்து கொண்டிருக்கும் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களின் நாடார்குல கனதனவான்கள் தங்கள் தங்கள் அபிமானத்தையும் ஆற்றலையும் பாராட்டி ஏராளமான டெலிகேட்டுகள் விஜயம் செய்து மகாநாட்டை வெகு சிறப்புடன் நடத்திவைக்க அன்பாய் அழைக்கிறோம்.

கான்பரன்ஸ் அபிமானிகளே! தங்கள் தங்கள் நகரங்களிலும் கிராமங்களிலுமிருந்து விஜயம் செய்ய விரும்பும் டெலிகேட்டுகளின் எண்ணிக்கைகளையும் விலாசத்தையும் கான்பரன்ஸ் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே உபசரணைக்கமிட்டி ஜெனரல் செக்ரட்டேரி என்ற விலாசத்திற்குத் தெரிவிக்கின் அன்னவர்களின் சௌகரியங்களை ஆலோசனை செய்து ஜாகை முதலிய வசதிகள் பிரத்தியேகமாய் தயார் செய்து கொடுக்க தாழ்மையாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். டிக்கெட் விற்பனைக்காக ஆங்காங்கு விஜயம் செய்யும் குலாபிமானிகளை வரவேற்று அன்புடன் உபசரித்து அன்னவர்களுடன் பலவகைகளிலும் ஒத்துழைத்து நமது மகாநாட்டை விமரிசையுடன் நடைபெறச் செய்யும்படி அன்பாய்க் கேட்டுக்கொள்கிறோம். மதுரை முதலிய தென் ஜில்லாக்களில் டிக்கெட் விற்பனைக்காக உபசரணைக் கமிட்டி [illegible] வேல்நாடாரவர்கள் இன்று சிலோன் போட் மெயிலில் புறப்படுகிறார்கள். சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களின் பல பாகங்களிலும் பழனி, உடுமலைப்பேட்டை, நஞ்சுண்டாபுரம் முதலிய முக்கிய நகரங்களிலும் டிக்கெட் விற்பனை செய்வதற்காக சங்கம் ஏஜெண்ட் ஸ்ரீமான் எ. எம். எஸ். அண்ணாமலை நாடாரவர்கள் சுற்றுப் பிரயாணத்திற்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் பிரயாணம் செய்துவிட்டார்கள். ஸ்ரீமான் வ. தி. சங்கரலிங்க நாடாரவர்கள் தென் ஜில்லாக்களில் டிக்கெட் விற்பனைக்காக வேண்டும் பிரயாசை எடுப்பதாக வாக்களித்துச் சென்றிருக்கிறார்கள். அன்னவருக்கு வேண்டும் ஒத்தாசைகள் செய்து ஏராளமான டெலிகேட்கள் விஜயம் செய்யும்படி தென் ஜில்லாக்களில் உள்ள குலாபிமானிகளை மறுமுறையும் கேட்டுக்கொள்கிறோம்.

### தொண்டர் தேர்ந்தெடுப்பு அறிக்கை.

ஆற்றல் வாய்ந்த தொண்டர்களே!

தொண்டர் நியமனக் கமிட்டி 15-9-27-ல் உபசரணைக் கமிட்டி ஆபீஸில்கூடி அடியில் கண்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்களுக்கு அடியில்கண்ட காரணங்களைத் தெரிவித்து நியமனக்கடிதங்கள் அனுப்பத் தீர்மானிக்கலாயிற்று.

காரணங்கள் 1. ஏராளமான தொண்டர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாலும் அதிக தூரமான இடங்களிலிருந்து வரவேண்டியதிருப்பதாலும் 2. நம்மவர்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கெல்லாம் பிரதிநிதித்துவம் சமத்துவமாய் கொடுக்க வேண்டியதிருப்பதாலும் 3. பண வருவாயின் சிக்கனத்தாலும் அடியில் கண்ட நிபந்தனைகளின் பேரில் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்பட்டன.

நிபந்தனைகள் 1. தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் தங்களுக்கு போகவர ஏற்படும் பிரயாணச்செலவை தங்கள்பொறுப்பில்வைத்துக்கொள்ளச் சம்மதிக்கவேண்டும். 2. நியமனம் செய்யப்பட்ட தொண்டர்கள் நானது செப்டம்பர் மீ 27௳ பகல் 10-மணிக்கு கும்பகோணத்தில ஜெனரல் செக்ரட்டேரி ஆபீஸில் சாரணர் உடைகளுடன் ஆஜராகவேண்டும். 3. ஷை மீ 21௳க்குள் தங்களுடைய சம்மதத்தைத் தெரிவிப்பவர்களை மட்டும் சேர்த்துக் கொள்ளப்படும்.

வி. சுடலைமுத்து நாடார்,

ஜெனரல்செக்ரட்டேரி,

# நாடார் மகாஜன சங்கம்

# 11-வது மகாநாடு.

## தஞ்சை ஜில்லா

## கும்பகோணத்தில்

அக்டோபர் மீ 1, 2, 3 உகளுக்கு

பிரபவ ௵ புரட்டாசி மீ 15, 16, 17 உகளில்

நடைபெறும்.

இந்தியச் சட்டசபை அங்கத்தினர்

ஸ்ரீமான் ஆர். கே.

ஷண்முகஞ் செட்டியாரவர்கள்

கௌரவ அக்கிராசனம் வகிப்பார்கள்.

### இலங்கை பாண்டிய நாடார் சங்கம்.

நாடார் குலத்தவர்களில் அநேகர் கையொப்ப மிட்டதைவேண்டி, மேற்கண்ட மகுடத்துடன் ஓர் புதிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதின் பிரதமக் கூட்டம் ஒய். எம். சி. ஏ. கட்டடத்தில், சென்ற 27-ம் உ சனிக்கிழமை மாலை 3-மணிக்கு நடைபெற்றது. ஏராளமான ஜனங்கள் பிரசன்னமாகி யிருந்தனர். இலங்கை அரசாங்கத்தில் வேலை பார்த்துவரும் ஸ்ரீமான்களான ஜி. பி. ஆர்தர், ஒய். ஆசிர்வாதம், இதர வாலிபர்களான ஸ்ரீமான்களான ஜே. எஸ். டானியல், எஸ். பி. எட்வர்டு, ராஜா கிறிஸ்தியன் தேவவரம், ஜே. எம். உல்லியம்முதலானோர் விஜயஞ் செய்திருந்தனர். பின்னர் இக்கூட்டத்தை அழைப்பித்த ஸ்ரீமான் ஜே. எஸ். டானியல் இச்சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் அதன் நோக்கங்களைப்பற்றியும் விரிவுரை பகர்ந்தார். இச்சங்கம் வேறு எந்தச் சங்கங்களுக்கும் முரண்பாடாக ஆரம்பிக்கப்படவில்லை யென்று அவர் குறிப்பிட்டது யாவராலும் கவனிக்கத்தக்கது. பின்னர் சப் கமிட்டியால் வாசிக்கப்பட்ட சட்ட திட்டங்கள் ஒவ்வொரு பாகமாய் வாசிக்கப்பட்டு, திருத்த வேண்டியவைகளைத் திருத்திக் கூட்டவேண்டியவைகளைக் கூட்டி, ஒழுங்காய் அமைக்கப்பட்டது. இச்சட்டங்களைக் கவனிப்பின், அவைகள் பூராவும் ஜன நாயகக் கொள்கையுடையனவாய் அமைக்கப் பட்டிருக்கின்றன வென்னலாம். இச்சங்கத்தில்ஓர் ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீமான் ஆர்தரவர்கள் ஷை கூட்டுறவுச் சங்கத்தை அரசாங்கத்தில் ரிஜிஸ்தர் பண்ணித்தரவும், அதை நன் முறையில் நடத்தித்தரவும் ஆதரவளித்தார்கள். சட்டதிட்டங்களின் சாராம்சம் பின் வருமாறு:—

1. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நாடார் குல மக்கள் யாவரும் அங்கத்தினராகலாம்.

2. பிரவேசக்கட்டணம் ரூ 1-0-0
மூன்றுமாசச் சந்தா ரூ 1-0-0

3. அங்கத்தினர் ஒவ்வொருவரும் சங்க நோக்கத்திற்கு உட்பட்டு நடப்போமென்று கையொப்ப மிடுவதல்லாமல், அங்கத்தினர் இருவரால் சிபாரிசு செய்யப்பட்டு இலங்கை பாண்டிய நாடார் சங்கக்கவுன்ஸிலால் ஒப்புக் கொள்ளப்படவேண்டும்.

4. கவுன்ஸிலில் உத்தியோகஸ்தர் உட்பட 18 அங்கத்தினர்களிருப்பார்கள். இவர்களில் 6 பேர் வருடா வருடம் கலைக்கப்பட்டு, வேறு 6 பேர் பொதுக் காரியக்கூட்டத்தில் தெரிந்தெடுக்கப் படுவார்கள். பழையவர்களே மீண்டும் தெரிந்தெடுக்கப் படலாம். 6-பேருக்கு அதிகமானவர் நியமிக்கப்பட்டால், கவுன்சிலால் தேர்தல் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டு ஷை கமிட்டி வருடாந்திர பொதுக்காரியக்கூட்டத்தில் 6 பேரை மாத்திரம் தெரிந்தெடுக்கும்.

5. கவுன்சிலே, பணம், சொத்து முதலானவைகளுக்கும், சங்கத்தைப் பொறுத்த எவ்வித வேலைகளுக்கும் ஜவாப்தாரியாகும்.

6. ஒரு மாதத்திற்கு ஒரு கவுன்ஸில் கூட்டமும், மூன்றுமாதத்திற்கொரு பொதுக்கூட்டமும் நடைபெறும்.

7. விசேஷப் பொதுக்கூட்டங்கள் பிரஸிடெண்ட் பொதுக்காரியதரிசி அல்லது 5 கவுன்சிலர்களின் சிபார்சின் பேரில் நடைபெறலாம்.

8. தொடர்பாக 4 கூட்டங்களுக்கு வராதவர் தன்னாலேயே கவுன்சிலை விட்டு நீங்கிவிடுவார்கள்.

9. பொக்கிஷதார் பணத்தை வாங்குவதும் கவுன்சில் அனுமதியின் பேரில் செலவிடுவதுமாக விருந்து ஒவ்வொரு கூட்டத்திலும் கணக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

10. பிரசிடெண்ட், பொக்கிஷதார் மெம்பர்களின் பிரதிநிதி இவர்கள் மூன்றுபேரும் தர்ம கர்த்தாக்களாவார்கள்.

11. பணம் இவர்கள் மூன்றுபேர் பேராலும் இலங்கை அரசாங்க சேவிங்ஸ் பாங்கில் ஷேமித்து வைக்கப்படும்.

12. அத்தியாவசியமான சிற செலவுகள்போக ஒரு வருடத்திற்கு யாதொரு செலவும் செய்யப்பட மாட்டாது.

ஷை சட்டதிட்டங்கள் நிறைவேறிய பின் கீழ்க்கண்டவர்கள் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

பிரசிடேண்ட் ஸ்ரீ. ஜி. பி. ஆர்தர்.

வைஸ் பிரஸிடேண்ட்கள்

1. ஸ்ரீ ஜே. எம். உல்லியம்ஸ் 2. ஜே. சாமுவேல் 3. ஒய். ஆசிர்வாதம். 4. ராஜாகிறிஸ்தியன் தேவவரம் 5. பா. பி. கு. மாணிக்கவாசகம்.

பொதுக் காரியதரிசி ஞா. பா. வேதநாயகம். பொக்கிஷதார் பி. ஜே. எட்வர்டு.

#### தர்ம கர்த்தாக்கள்.

1. பிரசிடெண்ட் 2. பொக்கிஷதார். 3. ஒய். ஆசிர்வாதம் (மெம்பர்களின் பிரதிநிதி).

#### கவுன்சிலர்கள்.

1. ஜே. எம்.உல்லியம்ஸ் 2. ஜே. சாமுவேல் 3. ராஜா தேவவரம், 4. எஸ். சாமுவேல், 5. ஜே. எஸ். டானியல் 6. எஸ். பி. எட்வர்டு 7. பி. ஜெபமணி, 8. ஜி. டெயர் 9. நோ-வா.ஞானையா,10.டி. பி. டேனியல் 11 ஜே. எஸ். டாசன், 12. டி. ஆர். ஷார்ஷிங்டன், 13. பா. பி. கு. மாணிக்கவாசகம், 14. ஜே. ஒய். ஐசக்

மேற்கண்ட தேர்தல் நடந்தபின் "தேங்கா யெண்ணெய்த் தொழில்" என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். சில வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப் பட்டபின் கூட்டம் முற்றுப்பெற்றது.

யாவரும் அங்கத்தினராய்ச் சேரக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்து வெளியை மனமிற
நினைவனே துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு புரட்டாசி மீ ௩ உ

---

## கும்பகோணம் மகாநாடு.

### IV

மகாநாடு கூடுவதற்கு இன்னும் பன்னிரண்டு நாட்கள் தானிருக்கின்றன. உபசரணைக் கமிட்டியாரின் ஐந்தாவதறிக்கையிலிருந்து மகாநாடு கூடுவதற்குரிய முன்னேற்பாடுகளெல்லாம் சர்வ சாக்கிரதையுடன் செய்து கொண்டிருக்கிறார்களென்று நன்கு தெரியவருகிறது. தென்னாட்டில் டிக்கெட்டு விற்பனைக்கு ஸ்ரீமான் தங்கவேல் நாடார் புறப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆங்காங்கு அவர்களை ஆதரித்து மகாநாட்டைச் சிறப்பிக்க வேண்டிய சகல வசதிகளும் செய்து கொடுப்பார்களென நம்புகின்றோம். ஆனால் மதுரையில் மகாஜன சங்க உத்தியோகஸ்தர்களையும், மற்றுங் குலாபிமானிகளையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோமென்றும் சொல்லப்படுகிறது. கும்பகோணத்தில் அவர்களுக்கு வேலை செய்வதாக வாக்களித்தபிரகாரம் மகாஜன சங்கம் காரியதரிசிகளும், மற்றுமுள்ள கனவான்களும் அவருக்கு ஒத்தாசை செய்வதில் சிறிதும் தயங்கக்கூடாது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வரக்கூடுமென்று உபசரணைக் கமிட்டியார் எதிர்பார்ப்பதாகவும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துவைக்க முன்னேற்பாடுடனிருப்பதாகவும் அறிகிறோம். ஆனால் மகாநாடு கூடுஞ் சந்தர்ப்பத்தில் மஹாத்மா காந்தி தென் ஜில்லாக்கள் மூன்றிலும் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார். மகாநாடு கூடுகிற பின்னிரண்டு தினங்களிலும் முக்கியமான விருதுநகரிற்றங்குவதாகத் தெரிகிறது. மகாநாட்டுக்கு விஜயஞ் செய்யக்கூடிய பலர் மகாத்மாவை வரவேற்பதிலும், அக்காட்சியைக் கண்டு களிப்பதிலும் ஈடுபட்டிருக்கக்கூடும். இதனுல் தெக்ஷணத்துப் பிரதிநிதிகள் அதிகம் வருவதற்குச் சிறிது தடை ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். என்றாலும் மகாநாட்டில்ச் சிரத்தையுடையவர்கள் அனேகர் வராமலிருக்கவுமாட்டார்கள். இப்பதினோராவது மகாநாட்டில் பல முக்கியமான விஷயங்கள் ஆலோசனைக்கு வரவிருப்பதால் குலாபிமானிகள் யாவரும் தவறாமல் விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அதாவது, சிவகாசி எட்டாவது மகாநாட்டில் தொடை நடுங்கச் செய்த தொண்டர் படையானது ஒரு பெரிய வேலைத் திட்டம் அமைத்து வைத்திருப்பதாகவும், இம்மகாநாட்டில் தீர்மானித்துத் துரிதமாய் வேலை செய்யப்போவதாகவும், அத்தீர்மானத்துக்கு ஆதரவு பல தேடிக் கொண்டிருப்பதாகவும் சிலர் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

மகாஜன சங்கம் தலைமை ஆபிசை மதுரையைவிட்டு வேறோரிடத்துக்கு மாற்ற வேண்டியவொரு தீர்மானங் கொண்டுவரப் போவதாகவும், அதற்கு இரண்டு முக்கியமான இடங்கள் பார்த்திருப்பதாகவும் ஒருவர் எழுதியிருக்கிறார்.

மகாஜன சங்கத்தை பாலியர்கள் கைப்பற்றித் தேசிய மயமாக்கி இன்னும் மேலான வழியில் நடத்த வேண்டிய ஒரு தீர்மானங் கொண்டு வரப்போவதாகவும் ஒருவர் எழுதுகிறார். ஸ்காலர்ஷிப் பணத்தை ஏழைகள் கைத்தொழில் விருத்திக்கும் உபயோகித்தாலென்ன; கை ராட்டினம் சுற்றுவதற்குதவி செய்தால் பல ஏழைக் குடும்பங்கள் ஜீவிப்பதற்கு ஏதுகரமாகும்; கைத் தொழிலால் அவர்கள் கஷ்டம் ஒருவாறொழிந்தால் சாதாரணக் கல்வியைப் பிறருதவியன்றி அவர்களே கற்றுக்கொள்ளக் கூடுமல்லவா வென்று பிறிதொருவர் வியாக்யானஞ் செய்து இதைப் பற்றியும் இம்மகாநாட்டில் முக்கியமாய் ஆலோசனைக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று எழுதியிருக்கிறார். இவ்வாறு இம்மகாநாட்டில் இவை போன்ற பல சிக்கலான பிரச்னைகள் எழுப்பப் படுமென்று நமக்கு இப்போதே தெரிய வருவதால் நாடார் குலாபிமானிகள் யாவரும் இம் மகாநாட்டின் விஷயத்தில் பாராமுகமாயிருந்து விடக் கூடாதென்று எச்சரிக்கின்றோம்.

பொதுவாகத் தேசப் புனருத்தாரணத்திற்குப் புதிய அரசியல் சீர்திருத்த விசாரணைக்கு ராயல்க் கமிஷன வரப்போகும் சந்தர்ப்பமாயிருப்பதால் நாம் செய்ய வேண்டிய வேலையென்ன வென்பதை முக்கியமாய் முக்கியமானவர்கள்ளொன்றுகூடி யோசிக்க வேண்டியதிருப்பதால் எல்லாத் தலைவர்களும் இம் மகாநாட்டுக்கு விஜயம் செய்ய வேண்டியதென்பதை நாம் பலமாய் வற்புறுத்துகின்றோம்.

விருதுநகர் நாடார்கள் மகாத்மாவை வரவேற்கும் பொறுப்பை ஒரு சிலர் வசம் ஒப்புவித்து உதவி செய்துவிட்டு மற்றவர்களாவது மகாநாட்டுக்கு விஜயஞ் செய்வார்களானுல் மிகவுஞ் சிலாக்கியமாயிருக்குமென்று நம்புகின்றோம்.

இம் மகாநாட்டில் பல முக்கியமான விஷயங்கள் ஆலோசனைக்கு வர விருப்பதாலும், நாடார் ஜனத்தொகையில் மிகச் சொற்பமான கும்பகோணம் நாடார்கள் மகாஜன சங்கம் வேண்டுதலுக்கிணங்கி இப்பெரிய காரியத்தை நடத்துவதற்கு தைரியமாய் முன்வந்திருப்பதாலும் அவர்களை உற்சாகப் படுத்தவும் விஷயாலோசனையிற் கலந்து கொள்ளவும் ஒவ்வொரு மாஜி மகாநாட்டு வரவேற்புத் தலைவருள், சட்டசபை மாஜி மெம்பர்களும் விஜயம் செய்யும்படி வேண்டிக்கொள்கிறோம். நமது சங்கம் வைஸ் பிரஸிடெண்டு ஸ்ரீமான் சௌந்தரபாண்டியநாடார எம். எல். சி. அவர்கள் மகாநாட்டுக்கு ஜனங்கள் உற்சாகத்துடன் விஜயம்செய்யும் வண்ணம் ஒரு அழைப்பு அனுப்புவார்களென்று நம்புகின்றோம்.

---

## குறிப்புகள்.

### காந்தி விஜயம்.

அஹிம்சா வறக்கடவுள்—அனைத்துயிர் ரக்ஷகராம் ஐயன் மகாத்மா காந்தியடிகள் சதர்கிறிஸ்தட் திரட்டும் கருத்துடன் தென்னாட்டுப் பிரயாணத்திலிருப்பது யாபேரும் அறிந்திருக்கக்கூடும். இப்பிரயாணத்தில் இந்நகர் (அருப்புக்கோட்டை)க்கு அருகாமையான விருதுநகருக்கும் நானது புரட்டாசி மீ 16 உ விஜயமாகி அங்கு மூன்று பொழுதுகள் தங்குவதாகத் தெரிகிறது. அங்கு தாமதிப்பு முடிவுற்றவுடனே இவ்வருப்புக்கோட்டை மகாஜனங்கள் ஐயனது புன்முறுவல் பொலிந்த மிகுதேஜஸ் மிளிரும் முகாரவிந்த தெரிசனம் கண்டுகளித்து நமது லக்ஷியம் நிறைவேறவேண்டுமென்றவரது கோக்கிற்கிசைய கண்ணியமான தோர் பண முடிப்பு பாத காணிக்கை வைத்துக் கனப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறார்கள். அழைப்பிற்கிணங்கி அடிகள் விஜயமாவார்கள். அங்ஙனே ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றோம். அடிகளின் புனித விஜயமானது இதுவரை தேசபக்கர்பத்திலீபெடாத பெல்லார்க்குப் புத்துணர்ச்சியும் தரபிமான வளர்ச்சி மிகுத்து, வழக்கம் வழக்கம் எனக் கொண்டுள்ள சில சமூகச் சிக்கல்கள் அறுந்து, எல்லோருள்ளும் பரஸ்பர ஒற்றுணர்ச்சி நிலவச்செய்யுமென நம்புகிறோம். மகாத்மாகாந்தி நீடூழி வாழ்க. அடிகளுக்கு நல்வரவாகுக.

### இளைஞர் மகாநாடு.

சுருதி, யுக்தி அனுபோகத்தால் சிறந்து விளங்கும் மேதாவிகள் பல்லாரின் நோக்கின்படி கடந்த மூவாண்டுகளாக நமது சமூகத்திடையே வாலியர் இயக்கம் வலுத்து வருவது அந்தர்முகத்தெனினும் அவ்வித சக்தியைப் பகிர்முகப்படுத்தலிற் சில பெரியோர் தங்கட்கேற்பட்ட பீதியால் ஒருக்கால் தடை வேலி வளர்த்தனர். அஃதால் விளைந்த அயர்வையும் நாளடைவில் அறியாதிரார். என்றாலும் வரும் கும்பகோணம் மகாநாட்டின் போது அக்டோபர் மீ 1உயில் இளைஞர் மகாநாட்டை எவ்விதத்தும் நடத்துவதாக முன்வந்து வரவேற்பாடுகளனைத்தும் மதுரை ஊழியப்பிரசார சபையார் ஏற்றுக்கொண்டதானது அவர்களின் முயற்சியின் பாற்பட்டதாகும். ஆகவே தேசம் இருக்கும் நிலையையும், ஜாதி இருக்கும் நிலையையுமோர்ந்து எவ்வகைத்தும் நாடார் இளைஞர் இயக்கம் அகத்தியம் வேண்டற்பால தென்பதைக் கொண்டு மகாநாட்டிற்குத் தவறாது விஜயம் செய்து ஆக்க வேலையில் தங்களின் கவனத்தைச் செலுத்துதல் இளைஞர் பாற்பட்ட கடமையாகும்.

### அதிபரின் புறப்பாடு.

வரும் அக்டோபர் மீ 1, 2, 3, உ களில் கும்பகோணத்தில் கூடும் நமது 11-வது மகாநாட்டிற்கு, உபசரணைக் கமிட்டியாரின் விருப்பிற்கேற்பவும், தமது கடமையாற்றவும், கான்பரன்ஸ் சம்பந்தமான முன்னேற்பாடுகளில் கலந்து கொள்ளவும் நானது 26-9-27-ல் நமது மித்திரன் அதிபரவர்கள் தமது சகாக்களுடன் கும்பகோணம் பிரயாணமாகிறார்கள்.

---

## நாட்டுநடப்பு.

மதுரை அமெரிக்கன் காலேஜ் ஹாஸ்டலில் உள்ள இந்து மாணவர்கள் சில கிறிஸ்தவ மாணவர்கள் தடை செய்தாலுங்கூட வழக்கப்படி விநாயகர் விக்கிரகத்தை வைத்து பூஜை செய்து சதுர்த்தி வைபவத்தைக் கொண்டாடினார்கள். இதைப்பற்றி புகார் கிளம்பியிருப்பதாகவும் தெரிகிறது.

---

மிஸ்மேயோ என்ற ஸ்திரீயும் பில்ச்சர் என்பவரும் இந்திய ஸ்திரீகளைப் பற்றி அவதூறுகப் பத்திரிகைகளில் எழுதியிருப்பதைக் கண்டித்து பல பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன. கண்டனக்கூட்டங்களும் பல நடைபெற்று வருகின்றன. வில்லெத்தில் கூடிய கூட்டத்தில் பிரிட்டிஷ் சாமான்களைப் பஹிஷ்கரிக்க வேண்டுமென்றும் அதை நடத்திவைக்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

---

55000 சிகரெட்டுகளை ஒருமணிநேரவளவில் செய்து முடிக்கவல்ல இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம்.

---

பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள புத்தகசாலையில் 40 லட்சம் புத்தகங்களிருக்கின்றன. அவைகள் 50 மைல் நீளமுள்ள அலமாரிப் பலகைகளில் அடுக்கப் பட்டிருக்கின்றனவாம்.

---

தென்னாப்பிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒருவகை மரம் லண்டன் தாவர வர்க்க ஆராய்ச்சியாளர் தோட்டத்தில் ஆயிரவருடங்களாக விருக்கின்றனவாம்.

---

கண்மைப் பலவித வர்ணங்களைக் காட்டி மகிழ்விக்கும் மயிலானது உலகத்திலகப்பட்ட அனேகமாய் ஒரே நிறமாய்த் தான் தோற்றமாம்.

---

ஜெர்மனியில் புகையிலைச் சத்து எற்றிய சாமிறக்கைகள் கொண்டு சருட்டு செய்கிறார்களாம்.

---

பீகார் அரசாங்கக் காரியாலயங்களில் தாத்துணியே பிரயோஜனப் படுத்தப் படவேண்டுமாய் சட்டசபையில் தீர்மானமாகியிருக்கிறது.

---

ஒரு மனித உடலின் நிறையில் இருபதில் ஒரு பங்கு நிறை இரத்தம் இருக்குமேல் அவன் சுக சரீரியாகக் கருதப்படுகிறான்.

---

பேனுட்டில் விளம்பரங்களை விநியோகம் செய்ய மனிதர்களைப்போல் உருவங்கள் செய்து நிமிஷத்துக்கு 5-வீதம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒருவரும் நோட்டீஸ் வாங்கவில்லையானுல் கொடுப்பதை நிறுத்திக் கொள்ளுமாம். ஒரு கையில் விளம்பரக் கட்டைவைத்துக் கொண்டு மறுகையால் எடுத்துக் கொடுக்குமாம்.

---

இந்தியாவில் ஒருநாளைக்குச் சுமார் 47000 ரூபாய் பெறுமான புகைச் சுருட்டுகளும் அதற்கு இருமடங்களவான நெருப்புப்பெட்டிகளும் செலவாகின்றனவாம்.

---

பாக சாரா என்னும் இந்திய சமஸ்தான அரசர் தமது சமஸ்தான எல்லைக்குள் மதுவகைகளும் மாட்டிறைச்சிகளும் நுழைக்கக் கூடாதென கண்டிப்பான உத்தரவிட்டிருக்கிறாராம்.

---

சிக்கந்திராபாத்தில் ஹைக்கோர்ட் வக்கீல் ஒருவர் தன் மனைவிக்கு சமஸ்கிருதம் கற்பிக்குமாறு ஒரு வாலிப வாத்தியாயரை நியமித்திருந்தார். வாத்தியாயர் வக்கீலின் மனைவியைக் கொண்டுபோய் விட்டார். வழக்கு நடக்கிறது.

---

ஸ்ரீமான் ஆர். எம். இராமசாமி பிள்ளைக்கும் ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாளுக்கும் விருதுநகரில் நடந்த திருமணத்தின் போது மணமக்கள் தூய கதராடையில் தோன்றினார்கள்.

---

கள்ளிக்கோட்டையில் 16 வயதுப் பெண்ணை சாந்தி முகூர்த்தத்திற்குப் புருஷன் வீட்டிற்கு அனுப்ப என்னி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ளுர்கள். புருஷன் காரனு தவ்வேற் பாடுக்கு தக்ஷிணையாக ஒரு பெருந் தொகை வேணுமெனக் கேட்டாளும். கேட்பதைக் கொடுக்க சக்தியற்ற ஏழைப் பெற்றோர்களின் கதியை அறிந்த அப்பெண் கிணற்றில் விழுந்திறந்தனள்.

காந்தியடிகள் சென்னை நகரத்தில் மட்டும் இந்தடவை கதர் ரூ 25000 வரை வசூல் செய்திருப்பதாகத் தெரிகிறது.

கணவன் இருக்கும் போதே மனைவி இறப்பது சாஸ்திர சம்மதப்படி மோக்ஷமென்று எண்ணங் கொண்ட தஞ்சாவூர் ஸ்ரீமான் ஜோதிப்பிரகாச கவிஞரின் மனைவியார் தமது 50 வது வயதில் தூக்கிட்டு இறந்தார்.

காரைக்காலுக் கருகாண்மையிலுள்ள நெத்தீஸ்வரத்தில் ஒரு ஸ்திரீ இரு தலைகளைக் கொண்ட ஒரு மகவை ஈன்றனள். அது சிறிது நேரம் உயிரோடிருந்து இறந்துவிட்டது. தலைகள் இரண்டும் வெவ்வேறு பார்வையோடிருந்தனவாம்.

ஓர் ஆங்கிலத் தொழிலாளி வறுமையின் நிமித்தம் தனது மனைவியை ஒரு நண்பருக்கு இங்கிலாந்தில் பத்துப் பவுனுக்கும் ஒரு மோட்டார் லாரிக்கும் விற்றுவிட்டார். ஆனால் முதல் கணவன்மீது வைத்திருந்த அத்தியந்தப் பிரியத்தால் புது கணவனை விட்டுப் பிரிந்து வந்துவிட்டாள். சமயம் கொடுத்த புருஷன் போலீஸாருக்கு இதை அறிவிக்க விசாரணையில் முதற்கணவன், மனைவி தனக்குக் கட்டுப்பட்டவளல்லவென மொழிந்தனனாம்.

திருப்பூர் கதர் வியாபாரிகளின் வேண்டுகோட்படி மகாத்மா காந்தியின் மூலதனத்தில் சர்க்கா சங்கத்தார் அதிக அகலத்துணிகளின் விலையை கஜத்துக்கு முக்காலணா வீதமும், குறைந்த அகலத்துணிகளின் விலையை கஜத்துக்கு அரையணா வீதமும் உயர்த்தத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சென்னையில் நீல்சிலைச் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பெண்களும் சத்தியாக்கிரகம் செய்கிறார்கள். கைதி செய்யப்பட்ட தொண்டர்களில் சிலர் மன்னிப்புப் பெற்றும் கொள்கின்றனர். பலர் வைராக்கிய சித்தர்களாய் அபராதத்தையும் ஏற்று சிறைவாசத் தண்டனையும் அநுபவித்து வருகின்றனர்.

12-9-27-ல் 18 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு காஞ்சிபுரமிருந்து சென்னைக்கு வந்த டாட்ஜ் மோட்டார் கார் சைதாப் பேட்டையில் அடையாற்றின் பாலத்தில், எதிரே வந்த பஸ் ஒன்றையும் சோடா வண்டியையும் கடக்க விலகும்போது கார் வந்தவேகத்தால் மரத்தால் கட்டப்பட்டிருந்த கைப்பிடியை தாக்கி, கைப்பிடி முறிந்து விழவே 33 அடி ஆழமுள்ள ஆற்றில் தெய்வ சங்கல்பத்தால் மணற்பாங்கான பாகத்தில் பிரயாணிகளுடன் பஸ் குப்புற விழுந்து விட்டது. ஸ்தலத்தில் ஒருவர் இறந்தார். பின் மற்றுமொருவர் இறந்ததோடு அபாயமான நிலைமையில் மூவரிருக்கின்றனர், பலருக்கு அங்கவீனங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

பர்மாவில் பெஸ்லீன் ஜில்லாவில் இரண்டு புலிகளின் உபத்திரவம் சகிக்க முடியவில்லையாம்.

பம்பாயில் ஒரு ஐரிஷ்காரரும், ஒரு ஆர்மீனியரும், ஆரிய சமாஜத்தால் இந்துமதத்தில் சேர்க்கப்பட்டனராம். இதிலொருவர் காந்தி குல்லாயும் கதர் வேஷ்டியும் கட்டியிருக்கிறார்.

இரங்கூனில் செப்டம்பர் ௴ 10 ௳ பகலில் சில வினாடிநேரம் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டதாம்.

கூர்ஜர வெள்ளக்கஷ்ட நிவாரண நிதிக்குஹைதராபாத் நிஜாம் அவர்கள் 50000 ரூபாய் கொடுத்திருக்கிறார்.

ருஷியாவிலேற்பட்ட பூகம்பத்தால் யல்டா, ஸ்பெண்டனிட்டலா முதலிய இடங்களில் அனேக சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

## உலகியல்.

### கணவன்மார்களே! பேச்சுக்கும் பஞ்சமா?

இல்லறம் பற்றி நவசக்தியில் பத்தினி எனக்கைச்சாத்திட்டுக் கூறுவதாவது:—

புகழ்ச்சிப்பற்று மனிதர்களுடைய இரத்தத்தில் ஊறிப்போன இயற்கை. அதிலும் மனைவி யொருத்தி தன் கணவன் வாயினால் புகழுரை பெறுவாளாயின் அதை விடப் பெரும் பேறு இவ்வுலகில் வேறில்லையெனக் கருதுவாள். ஒரு காசு செலவில்லாததான இக்சந்தோஷத்தை அவளுக்கு ஏன் அளிதல் கூடாது? நீர் காரியாலயத்துக்கோ, வயல் வெளிக்கோ சென்று வீடு திரும்பும்போது மனைவி உமது அறையைச் சுத்தமாகப் பெருக்கி, புத்தகங்களை அழகாக அடுக்கி வைத்திருப்பதைப் பார்க்கிறீர். "கமலா! இந்த அறையை இவ்வளவு அழகுபடுத்தி வைத்திருக்கிறாயே. பார்க்க எவ்வளவு நன்றாயிருக்கிறது! இதன் பொருட்டு உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்று கூறுவதில் லாபம் நிரம்ப உண்டு. மறுநாள் அவ்வறை இன்னும் சுத்தமாயும் அழகாயும் இருப்பதைக் காண்பீர். தன் மனைவியைக் குரூபி என்று கருதும் கணவன் அனேகமாய் இருக்க மாட்டான். கணவன் ஒவ்வொருவனும் தன் மனைவியை அரம்பை என்று கருதாவிடினும், சாதாரண அழகி என்றேனும் கருதுகிறான். மனதிலுள்ள இக்கருத்தை மனைவியிடம் சொல்லி விட்டால் என்ன முழுகிப்போய்விடும்? அவளுடைய மேனியின் அழகு, முகவசீகரம், முத்தன்ன பற்கள், ககைகளை வெட்கச் செய்யும் புன்னகை, நீல நிறக்கண்கள் இவற்றைக் குறித்துச் சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் ஒவ்வொரு வார்த்தை கூறிவாரும். உமது இல்வாழ்க்கை முன்னினும் பதின்மடங்கு இன்பமயமாகிறதா இல்லையா எனப்பாரும்!

ஃ ஃ

### மாணவர்களுக்கு புத்திமதி.

சென்னையில் மகாத்மாகாந்தியடிகள் கூறியதாவது:—

மாணுக்கர் எவரேனும் தங்கள் வாய்களை புகைப்போக்கியாக உபயோகித்து ஆபாஸப்படுத்தவும் சம்மதிப்பதுண்டோ என்று நான் அடிக்கடி ஆச்சரிய முறுவதுண்டு. சென்னையிலிருந்து தருவித்து ஸிகரெட்டு குடிக்கும் ஒரு பையனை நானறிவேன். கெடுதல் என்று ஏற்பட்டால் அது இந்தியாவிலிருந்து வந்தாலென்ன, அமெரிக்காவிலிருந்து வந்தாலென்ன, இரண்டும் கெடுதல்தான். இந்நாட்டில் ஸிகரெட்டுத் தொழில் வேண்டாம். ஸிகார்களில் அபின் கலப்புண்டு. அதைக் குடிப்பதனால் நரம்பு தளர்ச்சியேற்படுகிறது. ஸிகார் முதலிய வழக்கம் குடியைவிடப் பாதகமானது. பெரும் சாபக்கேடான குடிவழி அணுகாதீர்கள். ஸிகார் துர்நாற்றத்தையால், குடியைப் பைசாசமெனலாம்.

### கோபத்தின் அறிக்கை.

ருஷியஞானி டால்ஸ்டாய் எழுதியது:—

வாழ்வு நலத்தைக் குலைக்கும் முதலாவது பொறி என்று கிறிஸ்து எனக்கு அறிவுறுத்தியிருப்பது சகோதர மனிதர்களிடம் கோபம் அதாவது பகைமையாகும். இதை நான் நம்புகிறபடியால் இனிமேல் மனமறிந்து வேறு யாரிடமும் துவேஷம் கொள்ளேன். முன்னெல்லாம் போல் இனி என் கோபத்திலே சந்தோஷமும் பெருமையு மடையவும், அதற்கு நெய்யூற்றி வளர்க்கவும் என்னால் முடியாது. என்னை முக்கியமானவனாயும், அறிவுடையவனாயும் மற்றவர்களை அற்பர்களாயும் புத்தியில்லாதவர்களாயும் எண்ணி, என் கோபம் நியாயமானதென்று ஸ்தாபிக்கவும் இனி என்னாலாகாது. கோப உணர்ச்சி தோன்றுவதாய் அறிகுறி காணப்பட்டதுமே, தவறு என்னுடையதென்று ஒப்புக்கொண்டு மற்றவர்களிடம் சமரசத்தை நாடாதிருக்கவும் இனி என்னால்முடியாது.

கோபம் என்பது இயற்கைக்கு மாறான நிலையென்றும், தீமை பயப்பதென்றும் அறிந்திருப்பது போலவே அக்கோபத்துக்குக் காரணமான நிலைமை யாதென்பதையும் அறிந்திருக்கிறேன். நான் மற்ற ஜனங்களிடமிருந்து தனியாகி, அவர்களில் சிலரைமட்டும் எனக்குச் சமானமானவர்களாயும், மற்றவர்கள் எல்லாரையும் மூடர்கள், படியாதவர்கள், வெறும் பூஜ்யங்கள் என்றும் கருதுவதே அந்நிலைமை. மற்றவர்களிடம் என்னுடைய பகைமைக்கு முதன்மையான காரணம் இதுவேயென உணர்கிறேன். என்னுடையபழைய வாழ்க்கையை நினைவு கூறும்போது, எனக்கு மேலானவர்கள் என்று நான் கருதியவர்களிடம் என்னுடைய துவேஷம் கொழுந்துவிட்டெரிய நான் எப்போதும் இடம் கொடுத்ததில்லையென்று காண்கிறேன். அவர்களை நான் எப்போதும் அவமதித்ததில்லை ஆனால் எனக்குக் கீழானவன் என்று நான் கருதிய ஒருவன் எனக்குப் பிடியாத ஒரு சிறு காரியத்தைச் செய்தாலும் அவன்மீது எனக்குக் கோபம் கொதித்தெழுந்தது. அவன் என்னைவிட எவ்வளவு தாழ்ந்தவன் என எண்ணினேனோ அவ்வளவுக்கவ்வளவு அவனை அவமதித்தேன். ஆனால் இப்போது, எவனொருவன் தன்னைத்தான் தாழ்மைப்படுத்திக் கொள்கிறானோ, எவன் எல்லாருக்கும் தொண்டனாயிருக்கிறானோ அவனே மேலானவன் என்று உணர்கிறேன். மனிதர்களால் உயர்வாகக் கருதப்படுவது ஆண்டவன் முன்பு இழிவாதல் ஏன் என்பதையும் செல்வர்களும், சீர்திமான்களும் இறைவன் முன்பு கடையோர் ஆவதும், ஏழைகளும் தாழ்ந்தவர்களுமே அவன் அருளுக்கு அருகராவதும் ஏன் என்பதையும் இப்போது அறிந்துகொண்டேன்.

## நாடார் இளைஞர் மகாநாடு.

1927-௵ அக்டோபர் ௴ 1௳ சனிக்கிழமை கும்பகோணத்தில் நடைபெறும்.

"நாடார் குல மித்திரன்" அதிபர் ஸ்ரீமான்

**S. A. முத்து நாடார் அவர்கள்**

அவைத்தலைமை வகிப்பார்கள்.

பிரவேசக் கட்டணமில்லை. இளைஞர் ஒவ்வொருவரும் அழைக்கப்பெறுகிறார்கள்.

☞ நாடார் ஊழியப் பிரசுரசபை,
வரவேற்புக் கமிட்டியார்.

## அரிய வுரைகள்.

சத்தியத்திற்காக இந்தியாவின் சுதந்திரத்தைக்கூட நான் விட்டுக்கொடுக்க சம்மதிக்கிறேன்.

—மகாத்மா காந்தி.

மேல் நாட்டில் குளிர் தேசத்தில் கம்பளிகளையும் மயிர்களையும் போர்த்திக்கொள்ளுவது அவசியமாகும். அவற்றையே நாம் சென்னையில் போர்த்திக்கொண்டால் சூட்டினால் இறக்க வேண்டியதுதான். அஃதே போன்று மேல் நாட்டு நாகரீகங்களில் எது நமக்கு உதவும் எது நமது தர்மத்திற்குப் பொருத்தமானது என்று நமது விவேகத்தால் தீர்மானித்துப் பொறுக்கிக் கொள்ளவேண்டும்.

—ஷியார்.

ஒரிஸாவிலுள்ள ஏழைச் சகோதரிகள் புடவைகளையே அறியார்கள். அவர்கள் அணிவது கந்தை கிழிசல். ஆனால் அவர்கள் வெளிப்பார்வைக்கு நிர்வாணமாகத் தோன்றினும் அவர்களே உண்மையில் ஆடையணிந்தவர்கள். நாம் அளவுக்கதிகமான பட்டுப் பட்டாடைகள் தரித்திருந்தாலும் அந்நியர் கை எதிர்பார்க்கும் நாமே உண்மையில் மான உணர்ச்சி இழந்தவர்கள்.

—மகாத்மா காந்தியடிகள்.

என்னைப்பற்றி நகையாடலாம். நீர் ஏழை; பலவீனர் உம்மால் ஒன்றும் ஆகாது என்று சொல்லி என்னை வாயடக்கலாம். ஆனால் ஆண்டவனிடம் பரிபூரண நம்பிக்கை எனக்கிருப்பதால் அவனுடைய படைப்பான உங்களிடமும் நம்பிக்கை எனக்கு உண்டு.

—ஷியார்.

சயநலக் கருமம் ஒருவனை பந்தத்துக்குள்ளாக்குகிறது. பிறருக்காகச் செய்யுங்கருமமோ ஒருவனைப் பந்தத்தினின்றும் விடுதலை செய்கிறது. ஆகவே பரநலத்துக்கான கருமத்தையே செய்வோமாக.

—ஷியார்.

இந்தியா சுதந்திரமுடைய நாடாயிருக்குமாயின் ஒரு பெரும் ஜீவநதியை யொத்துத் தன் தொழில்கள் வியாபாரப் பண்டங்கள் பொருட்செல்வம் கலைச் செல்வம் விஞ்ஞானச் செல்வம் பாரமார்த்திக வாழ்க்கை எனும் இனிய நீர்ப் பெருக்கினால் உலக நாகரீகமெனும் பயிருக்கு செழுமை கொடுத்துக் கொண்டிருக்கும்.

—கே. டி. ஸண்டர்லண்டு,

### ஆழ்வோரின் கருத்து என்ன?

அமெரிக்க அறிஞர் ஜே. டி. ஸண்டர்லண்டு மார்டர்ன் ரிவியூவில் இந்திய சுதந்திரத்தைப்பற்றி பின் வருமாறு கூறுகிறார்:—

மிகக் கூர்மையான அறிவும், மிகுந்த வலிபடைத்த மனமும், அவற்றிற்குத் தகுந்த வேலை கொடாவிடின் முறையே மழுங்கியும், பலவீன முற்றும் போகும். அதேவிதமாக, ஒரு தேசமக்களைப் பலவீனப்படுத்தி இழிநிலைக்குக் கொண்டுபோகக் கூடியது தங்கள் காரியங்களைத் தாங்களே செய்து கொள்ளச் சுதந்திர மின்மையைப் போல் வேறெதுவுமில்லை. அரசாங்கத்தின் உயரிய நோக்கம் சட்டம் அன்று; ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டுவதுகூட அன்று. அசுரத்தன்மை வாய்ந்த கொடுங்கோன்மையின் கீழும் இது நிலை நாட்டப்படலாம். சுயாட்சிக்குத் தகுதியுண்டாக்குவதே அரசாங்கத்தின் உயரிய நோக்கமாகும். பலவீனமுற்ற ஜனங்களைப் பலசாலிகளான ஜனங்கள் ஆட்சி புரிதலாகாதென்பதற்கு, முன்னவர் தங்கள் வளர்ச்சிக்குத் தாங்களே முயற்சி செய்ய முடியாமற் போவது ஒன்றைக் குறிப்பிடுதலே சாலும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சங்கம் நடைமுறைத் திருத்தம்.

### கிராமஉத்தியோகக் கைப்பற்று.

பின்கண்ட தீர்மானங்களை கும்பகோணம் காண்பரன்ஸில் நிறைவேற்ற ஸ்ரீமான் கனியப்ப நாடாரவர்கள் ஆலோசனைக்கு அனுப்பியிருப்பதாக அறிவிக்கிறார்.

1. இப்போது இருக்கும் சங்கம் சந்தாத்தொகையைகுறைத்து அணா 4 ஆக ஆக்கவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. நாடார் மகாஜன சங்கத்தை ஜில்லாவாரியாக சர்க்கிளாகப் பிரித்து ஒவ்வொரு சர்க்கிளையும் 20 சப் டிவிஷனாகப்பிரித்து ஒவ்வொரு சப் டிவிஷனுக்கும் 5000 தலைக்கட்டு கள் அடங்கிய கிராமங்களைப் பிரித்து சம்பளத்திற்கு ஆள்வைத்து தலைக்கட்டு வரி சந்தா முதலியவைகளை வசூல் செய்யவும் சங்கத்தின் நோக்கங்களை தெரியப்படுத்தவும் வேண்டுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது.

3. மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தப்படி ராஜீய விஷயத்தில் ஓட்டெடுத்தலே பிரதானமாயிருப்பதாலும், கிராமத்திலுள்ள கர்ணங்களே இன்றியுள்ள வோட்டர்களை பதிவு செய்யவேண்டிய திருப்பதாலும் வேணுமென்று தவேஷங்கொண்டு அநேக நம் நாடார் ஓட்டர்கள் பதிய விடுபட்டிருப்பதாலும் இக்கூட்டம் இதை பலமாகக் கண்டிப்பதுடன் மேல்கொண்டு அப்படி நேராவண்ணம் சங்கம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. திருநெல்வேலி ஜில்லாவில் நாடார் கர்ணங்களே இல்லாமல் ஒன்று இரண்டு அபூர்வமாய் இருப்பதால் நாடார்கள் மெஜாரட்டியாய் வசிக்கும் கிராமங்களுக்கு நாடார் கர்ணங்களையே ஏற்படுத்தவேண்டுமென்று இக்கூட்டம் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்கிறது.

5. அடுத்த 12-வது கான்பரன்ஸுக்குள்ளாக நன்கொடையாக ரூ 1000000 வசூல் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

### இராமநாதபுரம் ஜில்லா அரசியல் மகாநாடு.

இராமநாதபுரம்ஜில்லா அரசியல் மகாநாட்டிற்கு பிரதிநிதிகள் சேர்ப்பதற்கு இராமநாதபுரம் தாலுகா காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் லக்ஷ்மணபிள்ளை, விருதுநகர் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் கே. எஸ். முத்துசாமி, ஸ்ரீமான் காமராஜ நாடார் முதலியவர்கள் அருப்புக்கோட்டைக்கு 10-9-27 ல்விஜயம் செய்தமாலை 7-மணிக்கு பெரிய கடைபஜாரில் ஸ்ரீமான் வீரய்யாசெட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. தென்னாடு சுற்றுப்பிரயாணம் வரும் மகாத்மாகாந்தியடிகளை வரவேற்க முன்னேற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் இராமநாதபுரத்தில் கூடும் ஜில்லா அரசியல் மகாநாட்டிற்கு அனைவரும் விஜயஞ் செய்யவேண்டுமென்றும் அவ்வமயம் கேட்டுக்கொள்ளப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### காரியதரிசி தேர்தல்.

நமது மகாஜன சங்கம் காரியதரிசி பதவிகள் கும்பகோணம் மகாநாட்டில் காலியாகி புதிய உத்தியோகஸ்தர்கள் சேர்ந்தெடுக்கப் படுவதில் தொழிலாளர் சார்பாக காரியதரிசி பதவிக்கு அபேக்ஷகராக முன் வந்திருக்கும் மதுரை, ஸ்ரீமான் வ. தி. சங்கரலிங்க நாடார் அவர்களையே சகலரும் ஆதரிக்க வேணுமாய் கேட்டுக்கொள்வதாக ஸ்ரீமான் ஆ. க. ஆறுமுகநாடார் எழுதுகிறார்.

## 11-வது மகாநாடு.

பலவழிகளிலும் துன்பப்பட்டு, அநேக கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருந்த நாடார் மக்களை ஒன்று திரட்டி ஓர் மதிப்புள்ள சமூகமாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நமது நாடார் மகாஜன சங்கம் ஏற்படலாயிற்று. அச்சங்கம் தலைவர்களின் விடா முயர்ச்சியாலும் பொது ஜனங்களின் ஒத்தகூழப்பினாலும் நன்னிலை எய்தி 10 மகாநாடுகள் நடத்தி மக்களினிடையே சுயமரியாதை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூவகை நல் லுணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. அவ்வுணர்ச்சிநாடெங்கும்பரவிப்பொது ஜனங்களிடையே சமூக ஆர்வம் அதிகரித்து சமூக விடுதலையின் பால் அவர்களின் உள்ளத்தை ஈர்த்து நிற்கின்றது.

இந்நிலையில் நமது 11-வது மகாநாடு கும்பகோணத்தில் கூடப்போகின்றது. இம்மகாநாட்டை சகல வழிகளிலும் சிறந்த மகாநாடெனப்பது மிகையாகாது. தஞ்சாவூர் ஜில்லாவில் தோன்றிய நம் மகாநாடு அத்தஞ்சாவூர் ஜில்லாவிலே தன்னோக்கத்தைப் பூர்த்தி செய்யுமென்பதற் குறிகுறிகள் பல தோன்றுகின்றன. இம்மகாநாடு அரசியல் வானத்தில் சுதந்திரமேகங்கள் கூடியிருக்கும் இக்காலத்தில் நம் வாலிபர்களுக்கு ஓர் நல்லுபதேசம் செய்வதுடன் ஓர் சிறந்த மார்க்கத்தையும் காட்டுவது நிச்சயம். தமிழ்நாடெங் செணும் சுயமரியாதை மணம் வீசிக்கொண்டிருக்கும் இந்நெருக்கடியான காலத்தில் மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகிக்கும் சுயமரியாதை வீரரும், டபெரும் தலைவருமான ஸ்ரீமான் R. K. சண்முகம்செட்டியார் B. A. B. L., M. L. A. அவர்கள் நம் சமூகத்திற்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கே ஓர் புத்துணர்ச்சியை ஊட்டுவதும் கலங்கரை விளக்கம். ஆகவே ஒவ்வொரு நாடாரும் கும்பகோணத்திற்குச் செல்லக்கடமைப்பட்டுள்ளார். அங்குசென்று நம்மிடையுள்ள குறைகளை நிவர்த்திக்க பல தீர்மானங்கள் செய்து அமுலுக்குக் கொண்டுவர பல ஏற்பாடுகள் செய்யவேண்டும். அறியாமையை அகற்றி, வறுமையைப் போக்கி, "ஊக்கம்" எனும் வாணம் தோண்டி "ஒற்றுமை" எனும் சுவரெழுப்பி "ஆக்கவேலை" எனுங்கூரை வேய்ந்து "சமூக விடுதலை" எனும் பொற்கோட்டையை இம்மகாநாட்டில் கட்டுவோமாக. பதினோராவது மகாநாடு இனிது நடைபெறுக! அறம் வாழ்க !! மறம் வீழ்க !!!

நாடார் பரிபாலன சங்கத்தார்,

விருதுநகர்.

### அந்நிய நாட்டுச் சந்தாநேயர்களுக்கோர் வேண்டுகோள்.

நம்மித்திரனுக்கு 9-வதாண்டு ஆரம்பமாகி 1 மாதகாலமாகி விட்டதென்பது நேயர்கள் அறிந்த விஷயம். புதுவருடச்சந்தாப்பணத்திற்கு வி. பி. வசதியுள்ள இடங்களுக்கெல்லாம் வி. பி. யனுப்பிப்பணம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். வி. பி. வசதியில்லாத பினங்கு, சிங்கப்பூர், ஈப்போ, மலாக்கா, கோலாலம்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய ஜலப்பிரதேசங்களில் வாழ் சந்தா நேயர்களிடமிருந்து புது ஆண்டுக்கு இதுவரையிலும் பணம் வந்துசேரவில்லை. வழக்கம்போல் மணியார்டர் மூலமோ, போஸ்ட்டல் ஆர்டர்மூலமோ அனுப்பிவைத்தாதரிக்க அவர்களை வேண்டுகிறோம். மித்திரனின் ஊக்கமும் உற்சாகமும் சந்தாநேயர்கள் காலா காலத்தில் ஊட்டும் சந்தாப்பணவமுதையே பொறுத்திருக்கிற தென்பதை நேயர்களுக்கு நாம் சொல்லத்தேவையில்லை.

சிறக, அந்நியநாட்டு சந்தா நேயர்களிற் பலர் காலா காலத்தில் பணம் செலுத்தத் தவறியதால் அவர்களுக்கு நாலைந்து வருடச் சந்தாப் பணம் வரை பாக்கியாக நின்றுவருகிறது. பன்முறை இது பற்றி கடிதங்கள் எழுதியும் கவனித்தார்களில்லை. இவ்வளவுதூரம் மித்திரன் விஷயத்தில் பராமுகமாயிருப்பது மிக விசனிக்கத் தக்கதாகும். ஆனால் அவர்கள் வேண்டுமென்றே அலக்ஷியஞ்செய்கிறார்களென்று நம்ப முடியாது. பாக்கி விபரம் அப்புள்ளிகளுக்கு கடிதம்மூலம் அறிவிக்கப்படும். கடிதம் கண்டவுடன் குறிப்பிட்ட தொகையை அனுப்பிவைத்து மித்திரன் அபிவிருத்தியை நாடப் பிரார்த்திக்கின்றோம்.

## இலங்கை.

கொளும்பு ஜீவன சேயத்தில் தேவதாயாரின திருத்தின வைபவக் கொண்டாட்டம் 14-8-27-ல் கொளும்பு வடக்கன்குளம் நாடார் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நடைபெற்றதற்கு பல கனவான்களிடமும் நன்கொடையாக வசூல் செய்ததில் மொத்த வசூல் ரூ 45 சதம் 20-ல் கோவில் செலவும் சில்லரைச் செலவமாக ரூ $33\frac{1}{2}$ நீக்கி மீசம் ரூ 6—14—0 இருப்பிருப்பதாக விரிவான விபரத்துடன் டை சங்க கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

கள்ளிக்குளம் பால்யநாடார் சங்கம் 5-வது வருட 6-வது மாதாந்தக்கூட்டம் சென்ற 11-9-27-ல் மாலை 9-30 மணிக்கு உணுப்பெட்டி 5-ம் நிர் கட்டடத்தில் ஸ்ரீமான் வி. இ. மரியமிக்கேல்நாடாரவர்களின் தலைமையின் கீழ் நடந்தேறியது. அவ்வமயம் மிகத் திரளான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். தலைவரவர்கள் முகவுரைக்குப் பின் ஸ்ரீமான்களான வி. மி. செயராதநாடார் ஒற்றுமை என்பது பற்றியும் வி. ச. அந்தோனிசவேரி முத்துநாடாரவர்கள் தற்காலம் நமது சங்கம் நடைபெறும் விதம் என்பது பற்றியும், கா. வ. தேவசகாய நாடாரவர்கள் இனிமேல் நமது சங்கம் நடத்திக்கொள்ள வேண்டியமுறை என்பதுபற்றியும் முறையே சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அக்கிராசனரவர்களால் முடிவுரை கூறப்பட்டு தற்கால சேசியக் கீதங்களுடன் ராஜவாழ்த்து கூறி 12-மணிக்கு கூட்டம் கலைந்ததென கௌரவ பொக்கிஷதார் ஸ்ரீமான் வி. மி. ஏசுவடியாநாடார் எழுதுகிறார்.

இலங்கை பாண்டியநாடார் சங்கத்தின் முதல் கவுன்சில் கூட்டம் 10-9-27-ல் மாலை 4-மணிக்கு ஒய். எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட நடபடிக்கைகள் நடந்தேறின:—

1. ஐக்கிய நாணய கூட்டுறவு சங்கம். இதைப்பற்றி சட்ட திட்டங்கள் தயாரிக்கவும் அரசாங்கத்தாருடன் கடிதப்போக்கு வரத்துசெய்யவும் மெஸ்ஸர்ஸ் ஜீ. பி. ஆர்தர், டி. பி. டேனியல், ராஜா தேவவரம், எஸ். சாமுவேல் ஒய். ஆசீர்வாதம் (கமிட்டி கூட்டுபவர்) முதலியவர்களடங்கிய ஓர் சப்கமிட்டி நியமிக்கப்பட்டது.

2. பணப் பொக்கிஷதார் கூட்டத்தில் வரவுசெலவு கணக்கை சமர்ப்பித்தார். அக்டோபர் மாத கூட்டத்திற்கு முன் பணத்தை தர்ம கர்த்தாக்கள் சங்கத்தின் பேரால் ஈஸ்டர்ன் பேங்கில் போட்டுவைக்க வேண்டுமெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது.

4. ரசீது புஸ்தகம் அங்கத்தினர் சேர்க்கக்கூடிய பாரம் முதலியவை அச்சடிக்கும் செலவுகளும், மற்றச் செலவுகளும் கவுன்சிலால் சாங்க்ஷன் செய்யப்பட்டன.

4. அங்கத்தினர் சேர்க்கவும் சங்க விஷயங்களைப் பிரசாரஞ்செய்யவும் ஒரு சப்கமிட்டி நியமிக்கப்பட்டது.

5. வேலை தேடும் சபை. வேலையில்லாது கஷ்டப்படும் நமது வாலிபர்களுக்கு வேலை தேடிக்கொடுக்க ஓர் சபை நியமிப்பதைப்பற்றியும் வேலையல்லாதவர்களின் பெயர் ஜாபிதாவை பதிவு செய்யவேண்டிய முறைகளைப்பற்றிய விவாதமும் அடுத்த மீட்டிங்குக்கென ஒத்திவைக்கப் பட்டன. அடுத்த கவுன்சில் மீட்டிங் அக்டோபர் மீ 15-ம்உ நடைபெறும் என்று பொதுக்காரியதரிசி எழுதுகிறார்.

## புதிய ரெயில்வே திட்டம்.

### கமுதி விளாத்திகுளம் மார்க்கமே ஜன சௌகரியம்.

மானாமதுரை, மணியாச்சிக்கு புதிய லயன்போடும் விஷயமாய் ஜனங்களின் ஏற்றுமதி இறக்குமதி முதலியவைகளை நேரில்க் கண்டறியும் பொருட்டு திருச்சி தென்னிந்திய ரெயில்வே அஸிஸ்டெண்ட் டிராபிக் சூப்பிரிண்டெண்டெண்ட் பல இடங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டு 26-8-27-ல் பெருநாழிக்கு விஜயம் செய்திருந்தார். ஷெயர் திட்டமாக ஏற்றெடுத்த ஊர்களின் பேரில் ரெயில்வே போகுமென்ற முடிவான அபிப்பிராயம் வெளியாக இன்னும் சுமார் ஆறுமாசங்கள்செல்லுமென்றுரைத்துள்ளார்.

ரெயில்வே கம்பெனியார் மானாமதுரையிலிருந்து வீரசோளம், தொப்பலக்கரை, நாகலாபுரம், சித்தவநாயக்கன்பட்டி, எப்போதும்வென்றான், பசுவந்தனை மார்க்கமாய் மணியாச்சி போவதே நேரான லயனென்றும்; ஆனால் நாகலாபுரம் தவிர மற்ற இடங்களெல்லாம் வர்த்தகச் சிறப்பில்லாத சிற்றூர்களென்றும் ஒப்பக்கொள்கிறார்கள். மானாமதுரையிலிருந்து கல்லூருணி, டஊர், நாகலாபுரம் போய் போவதென்றால்மதுரைவிருநகர் ரெயில்வேதொடர் வெகு சமீபத்திலிருக்கின்றதென்பது கவனிக்கத்தக்கது. ஆகையால் ரெயில்வேக்களிலிருந்து தூரத்திலுள்ளதும் உடு நாடுகளாகவும் பருத்தி, பருத்திக்கொட்டை, நிலக்கடலை, கருப்புக்கட்டி, மல்லி, சாரக்கட்டி, சோளம், தவசம், கேழ்வரகு, நெய், வத்தல், தோல், அரிசி, பலசரக்கு முதலிய வியாபாரங்கள் அபரிமிதமாய் நடக்கக்கூடிய இடங்களாகவுமுள்ள அபிராமம், கமுதி, பெருநாழி, விளாத்திகுளம் மார்க்கமாய் மணியாச்சி போவதே ஜனங்களுக்கும் கம்பெனியாருக்கும் மிகுந்த பயன் தருமென்பதை ஒப்புக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

எம். முருகேசபாண்டியன்.

### மதுரை.

மதுரை வடக்குவயன் தெரு, சிம்மக்கல் ஸ்ரீ கணேசபெருமான் திருச்சன்னதியில் சதுர்த்தியின் விசேஷ கொண்டாட்டத்தின் பொருட்டு கூடிய பொதுக்கூட்டத்தில் நமது வைக்கம் வீரர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமிநாயக்கர் அவர்களின் திரு வுருவப் படத்தை வைத்து பிராமணரல்லாத ஸ்ரீ டாக்டர் நாயர் பெருமான் சமத்துவ ஊழிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு திருவாளர்கள் அ. சு. அய்யநாடார்—பிரசிடெண்டாகவும், டீ. வெங்கிடபதி நாயுடு—வைஸ் பிரசிடெண்டாகவும், ஆர். பொன்னுசாமிபிள்ளை—காரியதரிசியாகவும், எம். இ. எம். பாஸ்கரதாஸ்—உப காரியதரிசியாகவும், அ. லே. முருகப்பநாடார்—பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்களென்று காரியதரிசி எழுதுகிறார்.

⁂ ⁂

கனவான்களே!

மதுரையில் சில பிராமண ஹோட்டல்களில் சூத்திரர்கள் என்றவார்த்தையை உபயோகப்படுத்தி விளம்பரப் பலகைகளை போட்டிருப்பதால் பிராமணரல்லாதாருக்கு ரொம்பவும் அவமானத்தை உண்டாக்குவதால் அவைகளை உடனே எடுக்கும் பொருட்டு பிராமணரல்லாத தொண்டர்கள் ஒன்று சேர்ந்து அக்டோபர் மீ 4உ செவ்வாய்க்கிழமை ஆயுதபூஜை தினத்திலிருந்து சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது.

கே. ஞானசுந்தரம் பிள்ளை,

யல். கிருஷ்ணசாமி நாயுடு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# கதரின் மகிமையும், நமது கடமையும்.

ப. வ. சோமசுந்தர நாடார் எழுதியது.

அருள் நிறைந்த பாரததேவியின்

அருமைப் புதல்வர்களே!

நம் நாட்டிற்கு, நூற்றலும், நெய்தலும் புதிதல்ல; அவைகள் நம் நாட்டின் புராதன தொழில்கள் அத்தொழில் விர்த்தி யடைந்திருந்த காலத்தில் தான், நம் தேசம் பொன் விளையும் பூமியென போற்றப்பெற்றது. நம் நாடு மெல்லிய ஆடை செய்வதிலும், உயர்ந்த பலவர்ணங்கள் உண்டாக்குவதிலும், பெயர் பெற்றிருந்த காலத்தில் தற்பொழுது கைத்தொழில் சிறந்து விளங்கும் மேனாடுகள், அநாகரீகத்தில் ஆழ்ந்திருந்ததாக ஆங்கில பண்டிதர் வெப்பர் கூறுகிறார். கிறிஸ்து பிறப்பதற்கு, சுமார் 3000 வருடங்களுக்கு முன்னரே, நம் நாட்டினின்றும் ஆடைகள் மேனாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு 2000 வருடங்களுக்கு முன், எகிப்தில் உள்ள புதைகுழிகளில், இந்திய சல்லாக்கள் மூடப் பட்டிருப்பதாக ஆங்கில நாட்டு சரித்திரங்கள் அறிவிக்கின்றன. 1787-ம் வருடத்தில், நம் நாட்டினின்றும் இங்கிலாந்துக்கு டக்கா மஸ்லீன்கள் 20 லக்ஷம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் டக்காவில் நூற்கப்பட்ட உயர்ந்த நூலை, கண்ணால் பார்த்து பரீக்ஷிக்க முடியாது, கையில் ஸ்பரிசித்தே பார்க்க வேண்டியிருந்ததென்றால், அதன் உயர்வைக் குறித்து நாங்களே யூகித்துக்கொள்ளும்படி விட்டுவிடுகிறோம். 1800-ம் வருடம் வரையில் மேனாடுகளுக்கு உயர்வான ஆடைகளை ஏராளமாக அனுப்பிக் கொண்டிருந்த நம் நாடு, கைத்தொழிலற்று, கஷ்டமுறுவதை நினைக்குங்கால், நம்மனம் கலங்குகின்றது; கண்ணீர் ததும்புகின்றது. ஐயோ, சுயாதீனமில்லாக் கொடுமையே!

காருண்யம் நிறைந்தவர்களெனக் கூறிக்கொள்ளும் ஆங்கிலேயர்கள், டக்கா நகர நூற்பவர்களுக்கு செய்த கொடுமைகளை, எவரும் மறக்க முடியாது. நம் நாட்டின் கைத்தொழிலில் ஆங்கிலேயருக்கு உண்டான பொறாமையாலும், தங்கள் கையில் அதிகாரமிருந்தமையாலும், உயர்வான நூல் நூற்போர்களின் கட்டை விரல்கள் துண்டிக்கப்பட்டன. இதைவிட பயங்கரமான கொடுமையான செய்கைவேறென்னவிருக்கிறது. இவ்வித கொடுமையான சூழ்ச்சிகளால், நம் நாட்டின் கைத்தொழிலுக்கு சாவுமணி யடித்தது. இவர்கள் செய்த கொடுமைகளை 1769-ம் வருடம் மார்ச்சு மீ 17-உ கிழக்கு இந்திய கம்பெனியார் வங்காளத்திலிருந்த அவர்களின் பிரதிநிதிகளுக்கு எழுதிய கடிதமும், ஸ்ரீமான் தத்தர் எழுதிய "பிரிட்டிஷ் இந்தியாவின் பொருளாதார சரித்திரமும்," நிரூபித்துக் காட்டுகின்றன.

இதன் பின்னரே, நம் நாட்டினர் தரித்திரத்தில் ஆழ்ந்தார்கள். மேனாடுகளிலுள்ளோர் தினசரி ரூ 2-0-0 வருமானமுள்ள வர்களாயிருக்க ரூ 0-0-7 வருமானமுள்ளவர்களானார்கள். உலகத்திலே. ஒரு காலத்தில் செல்வத்தில் சிறந்து விளங்கிய நமதிந்தியா, இப்போது, பைசா 7 ல் தமது ஜீவியத்தை நடத்திக்கொண்டு வருவதை நோக்கில், எவர் மனம் தான் வருந்தாதிருக்கும்.

நம் நாட்டினர் படும் சொல்லொணா கஷ்டங்களை கண்டே, காந்தியடிகள் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு வேலை தரக்கூடியதாயும், ஏழைகள் தங்கள் குடிசைகளில் தங்களுக்குப் பிரியமான காலத்தில் செய்யக்கூடியதாயும், மூலதனம் அதிகம் தேவையில்லாததாயும், பயிற்சிஅதிகம் வேண்டாததாயும், எளிதில் விலை போகக்கூடியதாயும் சகோதரத்துவத்தையும் சுதந்திரத்தையும், செல்வத்தையும் உண்டாக்கக் கூடியதாயுமுள்ள கதர் இயக்கத்தை ஆரம்பித்து தந்தார்.

நம் நாட்டின் முற்காலத்திய நிலையை உணர்ந்தோர் யாவரும், கதரை உற்பத்தி செய்வதிலும், அணிவதிலும் ஊக்கத்துடன் முன்னின்று வேலைசெய்வார்களென்பது உறுதி.

ஆனால் சிலர், கதரை நம் நாட்டினரின் தேவைக் குபோதியவளவு தயார் செய்யமுடியுமா, தற்கால இயந்திரத்துடன் சர்க்காவால் போராட முடியுமா வென சந்தேகிக் கின்றனர். அதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் விபரத்தை கண்ணுற்றால், நம் நாட்டில் கதர் உற்பத்தி எவ்வளவு சீக்கிரம் விர்த்தியாகி வருகிறதென்பது தெள்ளிதில் விளங்கும்.

கதர் உற்பத்தி விபரம்:—

| | | | |
|---|---|---|---|
| 1924 | ... | ... | ரூ 9,49,348 |
| 1925 | ... | ... | ரூ 19,03,034 |
| 1926 | ... | ... | ரூ 23,76,670 |

நாம் கதரை ஆதரிப்பதென கங்கணம் கட்டிக்கொண்டால், இது போன்று பலநூறுமடங்கு உற்பத்தி செய்யலாம். அதைப்பற்றி எவரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. கதர் இனி விர்த்தியடையுமென்பதற்குரிய அறிகுறிகள் காணப் படுகின்றன.

கதர் அணிவதால் நாம் பெரும் புண்ணிய சீலர்களாகிறோம். தருமம் செய்து புண்ணியம் அடைவதெனினும் பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும். பட்டினி கிடப்பவனுக்கு ஒரு பிடி சாதமிடுவதைக் காட்டிலும், அவனே அதை தேடிக்கொள்ள வகை செய்து கொடுப்பது சாலவும் நன்றல்லவா? அன்னச் சத்திரம் அநேகம் கட்டுவதிலும் ஏழைக்குடிசை ஒன்றில் இராட்டை ஒன்றை நாட்டுவது சிறந்த தருமமாகும். அன்னச் சத்திரங்கள் சோம்பேறி மடங்களாகக் கூடுமென்ற பயமுண்டு. ஆனால், இராட்டையில் அத்தகைய அச்சத்திற்கு அணுவளவுமிடமில்லை. தற்பொழுது இராட்டை சுற்றும் பெண்மணி நாள் ஒன்றுக்கு பெறக்கூடிய கூலி 0-1-6, 0-2-0 தான். இக்கூலிகளுக்கு பத்துமைல் தூரத்திலிருந்து கூட நடந்து கதர் டிப்போக்களை நாடிவருகிறார்களென்றால், நம் நாட்டில் தரித்திரம் எவ்வளவுதூரம் வேரூன்றியிருக்கிறதென்பதை கவனித்துப் பாருங்கள். 1926-ம் வருடத்தில் உற்பத்தியான 23, 76670 ரூபாய் கதரால், பஞ்சுகொட்டுவோர் 110 பேருக்கும் நெசவு தொழிலாளர் 3407 பேருக்கும், நூற்பவர் 42,959 பேருக்கும் பிழைப்பேற்பட்டிருக்கிறது. இத்தகைய ஏழைகளுக்குத் தொழிலும் அதன் மூலம் உணவும் கொடுப்பதைக் காட்டிலும் சிறந்த தர்மம் வேறென்ன இருக்கிறது? இந்தியாவிலுள்ள பட்டணங்கள் 2316, கிராமங்கள் 6,85, 665. பட்டணங்களின் ஜனத்தொகை 3 கோடியே 24 லக்ஷம். கிராமங்களின் ஜனத்தொகை 28 கோடியே 65 லக்ஷம். இந்தியாவின் ஜனத்தொகையில் 100-க்கு 90-வீதம் கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு, கதர் இயக்கம் மிகவும் பேராதரவாயிருக்கிறது. ஆதலால் நம் கிராமஜனங்களின் நன்மையையும் தேசத்தின் க்ஷேமத்தையும் கருதி ஒவ்வொருவரையும் கதரை ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

கதர் விலை யதிகமெனவும் கனமெனவும் சிலர் கூறுகிறார்கள். இரண்டிற்கும் ஆதாரமில்லை எனவே நாம் நம்புகிறோம். கதரில் மெல்லிய ஆடைகள் தற்பொழுது ஏராளமாகக் கிடைக்கின்றன. கதர் விலை அதிகமென்பதற்கு சமாதானம் கூறுகிறோம். முற்றிலும் கதர் அணியும் ஒருவரின் உடைச் செலவையும், சில சமயங்களில் சாதாரண உடைகளையும் விசேஷ காலங்களில் பட்டுகெண்டை வேஷ்டிகளையும் அணியும் ஒருவரின் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எத்தனையோ மடங்கு லாபம் கதர் கட்டுவதால் உண்டாகிறதென்பதை தெள்ளிதிற் தெரிந்து கொள்ளலாம். அன்னியநாட்டு ஆடைகளை அணிவோர் விசேஷ காலங்களுக்கு விலையுயர்ந்தவைகளை அணிந்தே தீரவேண்டும். இலதேல் அவர்களுக்கு கௌரவமில்லை எனக் கருதப்படுகிறது. கதர் அணிவோருக்கு நயமும் அதுதான் மட்டமும் அதுதான். சாதாரண காலத்திற்கும் அதுதான். கதரால் அன்னிய நாட்டிற்கனுப்பும் 60 கோடி ரூபாய் நம் நாட்டில் தங்கி நம் நாடு க்ஷேம மடைவதோடு நமக்கும் விசேஷலாபம் கிடைக்க வழியேற்படுகிறது. ஆதலால் சிக்கனத்தை நாடும் ஒவ்வொருவரும், கதர் அணிய முன்வரத்தயங்கார்களென உறுதியாய் நம்புகிறோம்.

கதர் அணிவது இராஜத் துரோகமென சிலர் கருதுவதாக அறிகிறோம். அம்மாதிரி கருதப்பட்ட காலமுமொன்றுண்டு. அக்காலம் தற்பொழுது மலையேறிவிட்டது. சென்னை கவர்ண்மெண்டார் அரசாங்க ஜெயில்களில் நெய்வதற்கு, கதர் நூல் கிடைக்கு மட்டும் வாங்கிக் கொள்வதாக உறுதிமொழி கூறுகிறார். கவர்ண்மெண்டின் பிரதம உத்தியோகஸ்தர்கள் கதர் தரிக்கிறார்கள். சகல கக்ஷியினரும் கதரை ஆதரிக்கிறார்கள். ஆதலால் கதரை அணிவது இராஜத்துரோகமென கூறுவது ஊத்தைக்கு கிற்காத சொல்லாகும். மாஜி ஜெர்மன் சக்கரவர்த்தி கெய்ஸர் சில மாதங்களுக்கு முன் தன்னை காணவந்த இந்தியர் ஒருவரிடம் இந்தியாவில் கதர் இயக்கம் விர்த்தியடையும்படி தாம் கடவுளைத் துதிப்பதாகவும், மகாத்மா காந்தியடிகளால் இந்தியா அநேக நன்மைகளை அடையப் போவதாகவும் கூறியுள்ளார். இந்தியாவிலுள்ள ஆராய்ச்சிக்காரர்களும் குடிசைத் தொழிலை ஆதரித்தே தற்பொழுது எழுதிக் கொண்டு வருகிறார்கள். ஆனதால் உலகம் போற்றும் உத்தமகதரை ஆதரிக்கும்படி ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஜீவகாருண்யம் நிறைந்த சீலர்களே!

நமது நாட்டின் க்ஷேமத்தையும் ஏழைகளின் துன்பத்தையும் மனதிற்கொண்டு, இந்தியர்களுக்கு தரித்திரத்தை நீக்கி செல்வத்தை தரவல்லதும், அடிமைத்தனத்தை தப்போக்கவல்லதும், சகோதரத்துவத்தை உண்டாக்கவல்லதும், சுதந்திர வீரத்தை உற்பத்தி செய்யவல்லதுமான கதரை அணியும்படி ஒவ்வொருவரையும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறோம்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

வது வேறெந்த ஐரோப்பியவல்லரசாவது ஜப்பானைப் பிடித்து அடக்கி அடிமையாக்கி ஆயுதங்களைப் பிடுங்கி அந்நிய சர்க்காரை ஏற்படுத்தி முக்கியமான உத்தியோகங்களில் அந்நியரை நியமித்து கல்வியை மறுத்து சட்டத்தை மாற்றும் அதிகாரத்தை மறுத்து சட்டத்திற்குக் கீழ்ப்படியச் செய்து வருமானத்தைக் கைகொண்டு ஆண்டு வந்திருக்குமானால் இந்தியா இப்போதுள்ள நிலைமையை விட மிகக் கேவலமாகவே ஜப்பானும் இருக்கும்.

இதற்கு மாறாக இந்தியா ஜப்பானைப்போல் நடத்தப்பட்டிருந்தால் ஜப்பானைவிட அதிக உன்னத நிலையை அடைந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? அபிவிர்த்திக்கு இன்றியமையாதது சுதந்திரம். கட்டு அடிமை என்பவை முன்னேற்றத் தடை, மதிப்புக்குறைவு, இழிவு, சாவு ஆகியவைகளைத் தான் குறிக்கும்.

---

# மானங் காத்தல்.

மானிடருக்கு மானம் இன்றியமையாதது. மானமற்றவன் மதிப்பற்றவனே! மானங் கெட்டவன் மதிகெட்டவன். மதிகொண்ணுச் செல்வமுடையோனாயினும் மான மொன்றில்லாவிடில் அவன் மானிடனாவனோ. மக்களில் அவனினும் கடையரில்லை. இதனாலேயே இனியவை நாற்பதில் "மானமழிந்த பின் வாழாமை முன்னினிதே" என நவின்றிருப்பதை நன்குணர்ந்து இதன் பெருமையை யறிக. ஆனால் மானத்தைத் தானே வீணாயழித்துக்கொண்டு தன் உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்பது இதனை யாக்கியோரின் கருத்தல்ல. அவரே அதைத் தொடர்ந்து "தான் மழியாமை தானடங்கி வாழ்வினிது" என வழுத்தியுள்ளார். ஆகையால் தனக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கும் பகுத்தறிவினால் தன் மனச்சாக்ஷியை மதித்து மானங்கெட்ட செயல்களை விலக்கி மானத்தோடு வாழ்வதே மனிதன் கடமையாகும்.

"அரைக்காசுக்கு விற்ற மானத்திற்கு ஆயிரம் பொன் செலவிட்டாலும் வருமா?" என்னும் தக்கோர் மொழியை உத்தேசித்துப் பார்ப்பாராயின் இவ்வுலகின் வீணான மயக்கத்தோற்றங்களெல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும். மானத்தோடு வாழ்பவனே உத்தம வீரனாவான். அவனுக்கு எத்துணை இடுக்கண்வரினும் தன் சன்மார்க்க நெறியினின்று சிறிதும் பிறழான். கவரிமான் தன் அழகிய வால் ரோமத்தில் ஒன்று போயினும் தன் உயிரைப் போக்கிக் கொள்வதுபோல் உத்தமன் தன் மான மழிந்த பின் உயிர் தரித்திரான். ஆர்பத் நட் பாங்கியின் சொந்தக்காரரான ஆர்பத் நட்துரை தன் பாங்கி நொடித்து தன்னால் கடனைக் கட்ட முடியாதென்று கண்டவுடன் தான் ரயில்வே தண்டவாளத்தில் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டது தன் அவமானத்தைச் சகிக்க மாட்டாமலல்லவா! மானஸ்தன் மரணத்திற்கஞ்சுவானோ?

ஒரு சாரார் நாம் மானத்தைப் பேணி எவ்வளவு ஜாக்கிரதையாய் வாழ்ந்து வரினும் நம் விதியின்படியே முடியுமென்பர். விதியை வெல்வது அரிதுதான். ஆயினும் "விதிபட வரினும் மதிபட உரை" என்னும் மறைமொழியைக் கடைப்பிடித்து, சிறந்துமாலவச் சிந்தையிலிருத்தி நமது மதியினால் மானத்தைக் காத்து வாழ்வதே கடமையாகும்.

எம். முருகேசபாண்டியன்,

பெருநாழி.

---

"1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரசாயமை, சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் சொலுஷன், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தங்கபிஸ்கெட், சிகரெட்டு, தீக்குச்சி, ரோமசம்ஹாரி, அத்தர், பற்பொடி, சுரைமயிர்களுக்குத் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. தன் விபரப் புத்தகம் இனும்! ஏமாந்துபோகவேண்டாம். ஷை பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" என்னும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். சிலர் ஐந்தாறு போலிமுறைகளை ரூ 1½ 2 என்று விற்பதைபபார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக்இனும்!

ஆர்ட்புக்ஸ் கம்பெனி, 13. திருச்சினாப்பள்ளி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection